விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 28 றவி ஆகிர் 15 இதழ் 359
யாழ்ப்பாணம் புதன்கிழமை 10.2.82

ஹோட்டல்
றி வே க் கா
HOTEL
RIVECAH
ஐஸ்கிறீம், குளிர்பானங்கள்,
புரியாணி, நூடில்ஸ், இடியப்பம்,
சாப்பாடு, பட்டர் கேக்
மற்றும் சிற்றுண்டி வகைகளுக்கும்
ஓடர்கள் உடன்கவனிக்கப்படும்
330, ஆஸ்பத்திரி வீதி—யாழ்ப்பாணம்
போன்: 480
[2236]

யாழ்ப்பாணத்தில்
## "பாஸ்போர்ட்" அலுவலகம்

(கொழும்பு)

பாஸ்போர்ட் வழங்கும் அலுவலகம் ஒன்று விரைவில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும்.

இத்தகவலை வெளிவிவகார அமைச்சர் ஜனப் ஏ. ஸி. எம். ஹமீட் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடபகுதி மக்கள் பாஸ்போர்ட் பெறுவதில் அனுபவிக்கும் சிரமம் குறித்து நல்லூர் எம். பி திரு எம். சிவசிதம்பரம் அமைச்சரின் கவனத்துக் கொண்டுவந்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (இ)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

★ சுன்னாகம் கொலை, கொள்ளை, தீவைப்பு

# நீதிமன்றத்துக்கு வரத் தவறிய 14 பொலிசார் மீது பிடி ஆணை!

## மல்லாகம் நீதிபதி உத்தரவு

(மாவிட்டபுரம்)

கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் காலத்தில் சுன்னாகத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது கொலை, கொள்ளை, தீவைப்புச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள பதின்மூன்று பொலிசார் மீது மல்லாகம் நீதிபதி பிடிஆணை பிறப்பித்துள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முன்பு கடமையாற்றிய சப் இன்ஸ்பெக்டர் பர்த்தலோமியஸ் சார்ஜன்ட் ரஞ்சித்கருணரத்ன, சுன்னாகம் பொலிஸ்நிலையத்தில் முன்பு கடமையாற்றிய சப்இன்ஸ்பெக்டர் ஜெயதிலகா மற்றும் 13 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மீதான கொலை, கொள்ளை தீவைப்பு வழக்கு நேற்று மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. கே. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் எடுக்கப்பட்டது. 16 பொலிசாரில் எவரும் நீதிமன்றத்தில் சமூகமளிக்கவில்லை.

இவர்களில் மூன்று பேருக்கு அழைப்பு ஆணை இன்னும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் மூவருக்கும் உடனடியாக அழைப்பாணை அனுப்பும்படியும்—

ஏனைய 13 பேரையும் கைது செய்து மூடிய வாகனத்தில் கொண்டு வந்து நீதிமன்றத்தில் ஆஜராக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

அரசதரப்பில் கொழும்பி

(8ம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் பாவனைக்கு யாழ். நகர மண்டபம்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் உபயோகத்துக்கு, யாழ் நகரமண்டபம் மீண்டும் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

இன்று புதன்கிழமை மாலை யாழ் மாநகர முதல்வர் திரு; இராஜா விசுவநாதன் வைபவரீதியாக இம்மண்டபத்தை திறந்துவைப்பார்.

ஸ்ரீ. ஆர், கிருஷ்ணமூர்த்தி மன்றக்கீதம் பாடுவார். முதல்வரின் தலைமையுரையைத் தொடர்ந்து, திருமதி லீலா ஆறுமுகையாவின் 'சதங்கை நர்த்தனுலய'' மாணவிகள் நடனநிகழ்ச்சி, நாடக அரங்கக் கல்லூரியின் ''பொறுத்தது போதும்'' நாடகம் ஆகியனவும் இடம்பெறவிருக்கின்றன. (மா)

'42 றிவோல்வர், டிரான்சிஸ்ரர் வானொலி

## ஒரு லட்சம் நகைகள் உருக்கிய நிலையில் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

இரகசியத் தகவலின்பேரில் யாழ். பொலிசாரால் அண்மையில் கைது செய்யப்பட்ட 5 இளைஞர்கள்மீதான விசாரணைகளைத் தொடர்ந்து, கொள்ளை அடிக்கப்பட்ட சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் யாழ் நகரிலுள்ள சில கடைகளில் உருக்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

புத்தூர், நவக்கிரி, திருநெல்வேலி, குரும்பசிட்டி ஆகிய இடங்களில் உள்ள வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளே இவையென தெரியவருகிறது.

மேலும் இவர்கள்மீது நடத்திய விசாரணையின்பின், '42' றிவோல்வர் ஒன்றும், ட்ரான்ஸிஸ்டர் றேடியோ ஒன்றும்

(8ப் பக்கம் பார்க்க)

## சபாஷ் மடுகல்ல!
### இலங்கை - 227-5

(கண்டி)

இங்கிலாந்து கிரிக்கெட் குழுவுக்கு எதிராக கண்டியில் நேற்று ஆரம்பமான மூன்று நாள் கிரிக்கட் போட்டியின் முதல்நாள் ஆட்டநேர இறுதியில் இலங்கைத் தலைவர்கள் கோஷ்டி 5 விக்கட்டுகள் இழப்புக்கு 227 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரஞ்சன் மடுகல்ல ஆட்டம் இழக்காது 115 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

காப்டன் டியூலிப் மென்டிஸ் 28 ஓட்டங்களைப் பெற்றார். ஜோன் லீவர் 2 விக்கட்டுகளையும் போல் அலொட் 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

இன்றும் ஆட்டம்தொடர்ந்து நடைபெறுகிறது. (இ)

கச்சதீவு உற்சவம்

## யாத்திரிகர் எடுத்துச் செல்லும் பொருட்கள் பெப். 15-ல் கொழும்பில் முடிவு

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்துக்குச் செல்லும் பொருட்கள்மீது கண்காணிப்பு பரிசோதனை நடவடிக்கைகள் இம்முறை தீவிரமாக மேற்கொள்ளப்படுமெனத் தெரியவருகிறது.

கச்சதீவுக்கு என்ன பொருட்களை எடுத்துச் செல்லலாம் என்பது குறித்து இம்மாதம் 15ம் திகதி கொழும்பில் நடைபெறும் மகாநாட்டில் முடிவு செய்யப்படவிருக்கிறது.

### கச்சதீவு உற்சவம்

கச்சதீவு வருடாந்த உற்சவம் மார்ச்மாதம் 10ம் திகதி ஆரம்பமாகி 15ம் திகதி முடிவடையும்.

### நேற்று நடந்த மகாநாடு

யாழ். செயலகத்தில் யாழ். ம. வட்ட செயலாளரும், யாழ்

(8 பக்கப் பார்க்க)

இன்று
மங்களத் திறப்பு விழா
யாழ்ப்பாணம் — ஓட்டோ சப்ளையாஸ்
ஸ்தாபனத்தார் தமது
"த நியூ ஓட்டோஸ்"
கிளையைக் கிளிநொச்சியில் திறந்து வைக்கின்றார்கள்
என்பதை — வாடிக்கைக்காரர்களுக்கும் —
ஆதரவாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.
கண்டி வீதி - கிளிநொச்சி
2238

மங்களகரமான திறப்பு விழா!

டில்கா
பேணிச்சர் பலஸ்
[வீட்டுத்தளபாட விற்பனையாளர்கள்]
இன்று (10-2-82) மாலை 3-30 மணிக்கு காங்கேசன்துறை வீதியிலுள்ள
234 - 236-ம் இலக்கக் கடையில் திறப்பு விழா
நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
அன்பர்கள் — ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
உரிமையாளர்
234 — 236, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8186 [2235]

### மணிவாக்கு

ஆத்திரம் என்பது பைத்தியத்திற்குச் சமானம்; அதை வளர்த்து வந்தால் நிலைமை மிகவும் மோசமாகி விடும்.

—மகாத்மா காந்தி

# நமது நோக்கு

## எங்கள் நூலகம்

'ரோமாபுரிஒருநாளிற் கட்டி எழுப்பப்பட்டதல்ல' என்பதை தீக்கிரையான யாழ்ப்பாண பொதுஜன நூலகத்தின் வரலாறு விளக்குகின்றது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே ஆரம்பமான இயக்கம், படிப்படியாய்வளர்ச்சியடைந்த நிலையில், பொது மக்கள் நூலகமாக மட்டுமல்ல, உயர்கல்விக்கு வசதியளிக்கும் ஒரு பல்கலைக்கழக அமைப்பைப்பெற்று விளங்கியது.

இதனைப் பறிகொடுத்த நாம் மேலே குறிப்பிட்ட பழமொழியில் நம்பிக்கை வைப்பது இன்றைய நிலைமைக்கு எவ்வகையிலும் உதவாது.

அத்திவாரக்கல் நாட்டுவதே தாமதம்; அது நிறைவேறியதும் அலடினுடைய 'அற்புத விளக்கை'க் கொண்டு ஒரு மாபெரும் நூலகத்தைக் கண்ணிமைப் பொழுதில் கட்டி எழுப்புவோமென்று ஒவ்வொருவரும் —எல்லோரும் இணைந்து— தொழிற்படுவதே இன்று பெரிதும் வேண்டப்படுவது.

யாழ். மாநகர முதல்வர் குறிப்பிட்டதுபோல் இந்தப் பேரழிவை பெரும்பேருக மாற்றிக்கொள்ளும் திருப்புமுனையாக்கிக் கொண்டால், எமக்கு ஏற்பட்ட சவாலை வெற்றிகரமாக நிறைவேற்றமுடியும்.

அவ்வித வெற்றி நம்முன்னேர் எமக்களித்த அருஞ்செல்வத்துக்கு நாம் தகுதியுடையவர்கள் என்பதையும், நாம்இன்றைய சந்ததியினர், இனிவரும் சந்ததியினர் நலத்தைப் பேணுவதில் அக்கறை கொண்டவர்கள் என்பதையும் நிரூபிக்கும்.

ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும்மாண்டது வராது; அதேசமயம் அழிவைக்கண்டுஅஞ்சாமல், ஆக்கத்துக்குரிய அத்தனை நடவடிக்கைகளில் தயக்கமின்றிக் குறிப்பதே இப்பகுதி மக்களின் தலையாய கடன்; இதற்குஒத்துழைப்பு நல்குவதில் அறிவில் ஆர்வம் கொண்ட அனைவரும் முன்வருவார்கள் என்பது திண்ணம்.

அறிவு என்று நாம் குறிப்பிடும்போது, புத்தம் புதிய கலைகள், அதிசய ஆராய்ச்சிகள் உலகின் நாலா பக்கங்களிலும் ஆறுபோல் ஊற்றெடுத்துப் பெருகுகின்றன என்பதை உணர்க.

'ஆறில்லா வூருக்கழகு பாழ்' என்ற வடுவுக்குநாம் ஆளாகாமல், எம்மைப் பாதுகாப்பது அறிவென்னும் ஆறு;இதனைஉணர்ந்த யாழ்ப்பாணத்தின் அருந்தவப் புதல்வர்கள்தொடங்கிய கைங்கரியம் 'எங்கள் நூலகம்' என்று உணர்வோமானல் எந்த இடரையும் முறியடித்து காரியசித்தி எய்துவோமென்பதில் ஐயமில்லை.

## நூறு நாள் வேலைநிறுத்தம்

அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின்5வதுசிராார்த்த தினத்தில், அவர் வடபகுதியில் நிறுவிய இரு பெரும் தொழிற்சாலைகள்நினைவுக்கு வருவது இயல்பு.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையும், பரந்தன் கூட்டுத்தாபனமும் அவருடைய அரசியல் நுண்மதிக்கும், அமைச்சின் நிர்வாகத் திறமைக்கும் எடுத்துக்காட்டாக இயங்கின.

இன்று, இவ்விரு ஸ்தாபனங்களும் இரு பெரும் நோயாளிகளாகவும், அரசுக்கு இரு தேவையற்ற 'பண்டங்கள்' போலவும் காட்சியளிப்பது வேதனைக்குரியதாகும்.

இவ்வாரம் யாழ்ப்பாணம் வந்த இன்றைய கைத்தொழில் அமைச்சர், அரசின் ஆக்கபூர்வமான திட்டங்களுக்கு வடபகுதி எம்.பி.கள் ஒத்துழைப்பை மறுக்கின்றனர் என்று ஓலமிட்டதோடு, தாம் அதனைப் பொருட்படுத்தாது, திட்டமிட்டபடி வேலைகளைத் தொடருவோமென்றும் வற்புறுத்தியிருந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடக் கட்டிடம், சில ஆண்டுகளுக்குப் பின் மூன்றிலொரு பங்கு முடிவடைந்ததும், 1970ல் காலஞ்சென்ற பிரதமர் டட்லி சேனநாயக்காவால் அடிக்கல் நாட்டப்பெற்ற காங்கேசன்துறைத் துறைமுக மேடை நாடகம் இவ்வாரம் நிறைவேறியது போல் கருதிய அமைச்சர் மத்தியூ, இவற்றிற்கு வடபகுதி எம். பி.களின் ஆசி கிடைக்கவில்லையே என்று கவலைப்படுவது அனுவசியம்.

ஆடு நனையுதென்று ஆடுகள் கவலைப்படுவதில் அர்த்தம் உண்டு. எத்துறையிலும் பின் நோக்கிச் செல்லும் வடபிரதேசம்' இப்பகுதி மக்களுக்கே கவலைக்குரிய விடயம்.

அன்று, ஐரோப்பாவில் நூறு வருட யுத்தம் நடந்ததாக வரலாறு குறிப்பிடுகின்றது. இன்று பரந்தனில் தொடரும் வேலைநிறுத்தம் நூறு நாட்களாக நடைபெறுகின்றது. 368 ஊழியர்கள் ஈடுபட்டுள்ள இந்த விவகாரத்தைத் தீர்த்து வைக்க எவ்வித முயற்சியும் எடுக்காத அமைச்சு, இப்பகுதி மக்களின் நலன் கருதி எதனையும் சாதிக்குமென்று நம்புவது எங்ஙனம்.

பரந்தன் பிரச்சனையை நாம் ஊன்றிப் படித்துச் சரி பிழை சொல்ல முற்படவில்லை; அது எமது பொறுப்பும் அல்ல. ஆனல் இவ்விதத் தகராறு ஒன்று தென்பகுதியில் எழுவதானல் அமைச்சர் மத்தியூ அதனைத் தீர்த்துவைப்பதில் 'ஒற்றைக்காலில்' நிற்பார் என்று இங்குள்ள மக்கள் நம்புவதைச் சுட்டிக்காட்டுவது எமது கடமை.

கதவடைப்பு, வேலைநிறுத்தம், கோழியும் முட்டையும்போல், எது முந்தியது என்பதல்ல பிரச்சனை; இதனைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பது முக்கியம் என்பதையே வலியுறுத்துகின்றேம்.

★ கிளிநொச்சி

# தனிமாவட்ட கோரிக்கையும் அதன் காரணிகளும்

அண்மையில் தீவிரமடைந்துள்ள கிளிநொச்சி தனிமாவட்டக் கோரிக்கைக்கு சிலர் அரசியல் முலாம் பூச முனைவதையும், வேறுசிலர் தட்டிக்கழிக்கின்ற போக்கையும், கொண்டு, கிளிநொச்சி தனிமாவட்டம் ஆகவேண்டு என்று நீண்ட நாட்களாய் குரல் எழுப்பிவந்த கிளிநொச்சிப் பிரதேச அபிவிருத்திக் கழகத்தின் சார்பில் அபிப்பிராயமும், விளக்கமும் அளிக்கவேண்டியது எனது கடமையாக உள்ளது.

கடந்த மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் கிளிநொச்சி முற்று முழுதாகப் புறக்கணித்து ஒதுக்கித் தள்ளப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி அடையவேண்டிய பிரதேசம் என்றுல் அது கிளிநொச்சிப் பிரதேசமே ஆகும். இப்பிரதேசம் 534 சதுரமைல் பரப்புடையதாகும். இதற்குப் பூஜ்ஜியமும் 295 சதுரமைல் பரப்புடைய ஏனைய இடங்களுக்கு ராஜ்ஜியமும் கிடைத்ததனல் இப்பிரதேச அரசியல் வாதிகள் மத்தியில் மட்டுமின்றிப், பொதுமக்கள் மத்தியிலும் ஒரு விரக்தியும், ஒருவித தனிப் போக்கு நிலைமையும் ஏற்படலாயிற்று.

மாவட்டஅபிவிருத்திசபைத் தேர்தல் தனிமாவட்டக் கோரிக்கைக்கான உடனடிக் காரணமாக இருந்தது. அடிப்படையான காரணங்கள் பற்பல இருக்கின்றன. என்பதையும் இங்கு தெளிவு படுத்துவதே முக்கியமானதாகும்.

கல்வியைப் பொறுத்தவரை இது மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. பலவிதமான சுயநலப்போக்குகளுடன் படையெடுத்தவர்களால், கட்டி எழுப்பப்பட்ட மண் வீடு யாழ்ப்பாணத்து மாடமாளிகைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற பரிதாபமான நிலைமையால் ஐம்பது வருட வரலாற்றைக்கொண்ட கிளிநொச்சியிலிருந்து அதன் பாடசாலைகளிலிருந்து இன்றுவரை ஒரு குடியேற்றத்திட்ட மாணவனும் பல்கலைக்கழகம் செல்ல முடியவில்லை என்றுல், அது யாழ்ப்பாண மாவட்டம் என்ற அளவுகோலால் அளவீடு செய்யப்படும் அறியாமையே ஆகும். துணுக்காய், மல்லாவி, செட்டிகுளம், பாலைக்குளம், போன்ற குடியேற்றத் திட்டங்களிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு மாணவர் செல்லும் போது முன் சொன்ன குடியேற்றத் திட்டங்களைவிட பல வழிகளிலும் அபிவிருத்தியடைந்த உருத்திரபுரம், இராமநாதபுரம், கனகபுரம், வட்டக்கச்சி, முரசுமோட்டை, தருமபுரம் போன்ற குடியேற்றத் திட்ட ஏழை விவசாயிகளின் பிள்ளைகள் தாகும் பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்று விரும்புவதில் பிழையில்லைத் தானே?

முல்லைத்தீவு, மன்னர் வவனியா, போன்ற மாவட்டங்களுடன் பலவழிகளிலும் ஒப்பிட்டுப்பார்க்கக்கூடிய பலவித அபிவிருத்திகளும் அடைந்த கிளிநொச்சிக்கு,மேற்சொன்ன மாவட்டங்களுக்குக் கிடைத்துள்ள, மாவட்ட ரீதியான ஒதுக்கீடுகள் இல்லாமல் போவதும், பல்கலைக் கழகக் கல்வி, வேலைவாய்ப்பு, என்பனவற்றில் புறக்கணிக்கப்பட்டு வந்ததும் தனிமாவட்டக்கோரிக்கையின் அடிப்படைக் காரணமாகும்.

ஆசிரியர் பற்றுக்குறைக்கும் கிளிநொச்சி, யாழ். மாவட்டத்தின் தூரஇடமாக இருப்பதே முக்கிய காரணமாக இருக்கின்றது. யாழ். மாவட்டத்திற்குள் திருநெல்வேலி ஆசிரியர் திருநெல்வேலியைத் தேர்ந்தெடுக்கவிரும்புவாரே அன்றி, கிளிநொச்சியைத் தேர்ந்து எடுக்கமாட்டார். இந்த நிலைமைகளே கிளிநொச்சியின் ஆசிரியர் பற்றுக்குறைக்கு முக்கியகாரணமாகும். ஆசிரிய நியமனத்தின்போது பலவழிகளிலும் கிளிநொச்சிக்கு இணையான முல்லைத்தீவு மாவட்டமானபடியால் 65 ஆசிரியர்களும், கிளிநொச்சி தேர்தல் தொகுதியானபடியால் 15 ஆசிரியர்களும்கிடைக்கின்ற நிலைமையும் ஆசிரியர் பற்றுக்குறைக்குக் காரணமாகித் தனியாவட்டக் கோரிக்கைக்குக் காரணமாய் இருந்தது.

எல்லாப் பிரதேசங்களும் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருவதுதான் வழக்கம் ஆனல் கிளிநொச்சி இதற்கு நேர்மாருனதாகும் அதாவது இதன் வளர்ச்சி படிப்படியாகக் குறைக்கப்பட்டு, வந்தமை இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியவையாகும்.

1. மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் (ASP's office) இங்கிருந்து வவனியாவிற்குக் கொண்டுபோகப்பட்டது.

2. மாவட்டத் தபால் அத்தியட்சகர் காரியாலயம் (D.S. office) இங்கிருந்து வவனியாவிற்குக் கொண்டுபோகப்பட்டது.

3. மரம் அரியும் ஆலை (Sawmill) இங்கிருந்து புளியங்குளத்திற்குக் கொண்டு போகப்பட்டது.

4. ஜீப் வசதியுடன் இருந்த கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு ஜீப் வசதி இல்லாமற் போனது.

5. வருடாந்த நிதி ஒதுக்கீட்டு நிதியும் சிலகாலங்களில் வேறு தொகுதிகளுக்குச்செலவு செய்யப்பட்டன.

6. கொழும்பு — கிளிநொச்சி நேரடித்தொலைபேசி வசதி இல்லாமல் செய்து கிளிநொச்சி அஞ்சல் அலுவலகத்தில் உள்ள Mannual boardம் அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7. நாலு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மூன்றுய்க் குறைக்கப்பட்டன.

இத்தகைய பாரபட்சமான நடவடிக்கைளும் தனிமாவட்டக் கோரிக்கையின் அடித்தளமாக்கப்பட்டன எனின் மிகையாகாது. கிளிநொச்சி தனிமாவட்டமாக்கப்பட வேண்டுமென்று1965ம் ஆண்டிலே பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் குரல் எழுப்பினுர். கச்சேரிக்கு என்று நிலமும் ஒதுக்கப்பட்டது.

பின்னர் எம். பி. யாக வந்த திரு, வீ. ஆனந்தசங்கரியும் பண்டிதர் அவர்களின் பின்னரும் கிளிநொச்சியைத் தனிமாவட்டமாக்கவேண்டுமெனக் கோரி நின்றிருந்தால்?... கிளிநொச்சிக்கு என்றே விடிவு காலம் பிறந்திருக்கும். ஆனல் இப்பகுதி மக்களின் காலந்தாழ்ந்த அதிர்ஷ்டந்தான் அவர் எம். பி. யாக வந்து 11 ஆண்டுகளின் பின்னர் கிளிநொச்சியைத் தனிமாவட்டமாக்கவேண்டும் என்று குரல் எழுப்ப வைத்துள்ளது எனலாம்.

தனிமாவட்டக் கோரிக்கை திரு. வீ. ஆனந்தசங்கரியினது தனிப்பட்ட கோரிக்கை என்று

(7ம் பக்கம் பார்க்க)

சி. இராஜேஸ்வரன்
(பொது செயலாளர் கிளிநொச்சி அபிவிருத்திக்கழகம்)

## மக்கள் கருத்து

### இந்த ஆபத்தை உணராதது ஏன்?

திருக்கேதீச்சர ஆலயச் சுற்ருடல் விடயமாக நான் எழுதிய கடிதம் 22—1—82ல் ''ஈழநாடு'' பத்திரிகையில் வெளிவந்ததை வாசித்த பல சைவப்பெரியார்களும் சைவ சபைத் தலைவர்களும், கத்தோலிக்கர்கள், புராதன புனித திருக்கேதீச்சர முன்றலில் பாலாவித் தீர்த்தத்தின் அருகே இருந்த ஒரு குகையை சேர். கந்தையா வைத்திய நாதனுக்கு எழுத்தில் அளித்த வாக்குறுதியை உதாசீனம் செய்து சைவ மக்கள் புண்படும் வகையில் ஆக்கிரமித்து கத்தோலிக்கத் தேவாலயம் கட்டுவது இதுவரை தங்களுக்குத் தெரியாது மர்மமாக இருந்தது என்றும் அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் எனக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளனர்.

சைவ மக்களின்விருப்பத்தை அறியாது நாவலர் பெருமான், சேர். இராமநாதன், சேர் கந்தையா வைத்தியநாதன் போன்ற சைவப்பெரியார்கள் பாதுகாத்த திருக்கேதீச்சர புனித நிலத்தில் கத்தோலிக்க தேவாலயம் கட்டுவதற்கு எப்படி அனுமதி அளிக்கப்பட்டது?என்பதை சம்பந்தப்பட்டவர்கள் விளக்கவேண்டும்.

அண்மையில் இங்கு வந்த அமெரிக்கரான சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் மறுபடியும் போர்த்துக்கேயர் இந்த நாட்டுக்கு வந்துவிட்டார்களா? மிகப் புராதனமான தலை சிறந்த சைவசமயம் இங்கு அருகிவருகிறகிறது சைவ சமயிகள் என்று சொல்லிக் கொள்ளும் நீங்கள் என்ன செய்கிறீர்கள்'' என்று கேட்டதன் அர்த்தம் இப்போது புரிகிறது.

பாலாவிக்கண்மையில் இவ்விதம் கத்தோலிக்க தேவாலயம் கட்டவிட்டால் காலப்போக்கில் எமது பாடல் பெற்ற புராதன புனித ஸ்தலத்தை இல்லாமல் போய்விடும்.

புத்தர் பெருமான சிலையை வவனியாவில் ஓர் அரசாங்கக் காணியில் உத்தரவின்றி யாரோ நிறுவிவிட்டார்கள் என்பதற்காக ஜனுதிபதி வரை சென்ற தமிழ்த் தலைவர்கள் திருக்கேதீக்சரத்திற்கு வந்திருக்கும் ஆபத்தை உணராதிருப்பது ஏன்?

சதா. ஸ்ரீநிவாசன்.
உடுவில்,
சுன்னுகம்.

# கூட்டணி அரசியல் கருத்துக்கள் விரைவில் மேடைகள் மூலம் அறிவிக்கப்படும்

## வதிரியில் தலைவர் 'சிவா' அறிவிப்பு

(கரவெட்டி நிருபர் எம். சுபேந்திரன்)

''தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் கருத்துக்களை விரைவில்மக்களுக்கு நாம் அறிவிக்கவுள்ளோம். இதற்கெனப் பொதுமேடைகள் அமைத்துக் கூட்டங்கள் பலவற்றை நடாத்தவும் இருக்கிறோம்.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் வதிரி கதிர்காம கோவிலடிகைத்தொழில்நிலைய மண்டபத் திறப்பு விழாவில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

வதிரி கதிர்காம கோவிலடி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. க. நாகேந்திரராசா தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''தமிழ் மக்களது எதிர்காலம் முன்னைய சகாப்தம் போல் இனிமேல் அமைந்துவிடாது. ஆசிரியத் தொழில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் போன்றவற்ருல் எமது எதிர்காலம் சுபிட்சம் மிக்கதாக விளங்கப்போவதில்லை. விவசாயம், கைத்தொழில்கள் போன்றவற்றினுலேயேஎமக்கு நல்ல எதிர்காலம் உண்டு. இவையே எமக்குக் கைகொடுத்து உதவப் போகின்றன.

''உடுப்பிட்டி எம். பி. திரு. இராசலிங்கம் தமது சமூகத்திற்கும், கிராமத்திற்கும் மாத்திரமே சலுகைகளும், உதவிகளும் செய்துவருகிருர் என்ற சிலரின் பிரசாரம் எனது காதுகளுக்கும் எட்டியது. பல ஆண்டுகாலமாக ஒதுக்கப்பட்ட சமூகத்தை முன்னேற்றுவதில் எந்தவித தவறும்கிடையாது. ஒதுக்கப்பட்டவர்களின் நலனில் அக்கறை கொள்வதே எமது இயக்கத்தின் கொள்கையாகும்.

''திரு. இராசலிங்கம், நானும் திரு. ஜெயக்கொடியும் உடுப்பிட்டித் தொகுதி எம். பி.க்களாக இருந்தபோது செய்யாத அபிவிருத்தி வேலைகளைக் குறைந்த காலத்தில் செய்துமுடித்துள்ளார். இதனையிட்டு நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். திரு. இராசலிங்கம் எமது இயக்கத்தில் ஒரு சிறந்த தொண்டனுக விளங்குவது எமது இயக்கத்திற்குப்பெரும் கொடையாகும்.

''எமது அரசியல் கருத்துக்களை விரைவில் மக்களுக்குத் தெரியப்படுத்த உள்ளோம். இதற்கெனப்பொதுமேடைகள் அமைத்து கூட்டங்களும் வைக்கவுள்ளோம். இவற்றின் மூலம் வெளியில் பேசப்படும் பிரச்சாரங்களுக்கு விளக்கமாக பதில் அளிப்போம்'' என்ருர்.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கைத்தொழில் நிலைய மண்டபத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறியதாவது:

### தெற்கும் வடக்கும்

''வெளிநாட்டு உதவியுடன் தென்னிலங்கைப் பகுதிகளில் பல அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. ஆனால் வடபகுதியிலோ எந்தவித அபிவிருத்தி வேலைகளும் எம். பி.க்களுக்கு ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டநிதியில் இருந்தே செய்யப்பட்டுவருகின்றன. இதனுலேயே எமது பகுதிகள் முன்னேற்றம் அடைய முடியாமல் பின்தங்கி இருப்பதுடன் தொழில் வாய்ப்பு வசதிகளும் குறைந்துள்ளன. இதன் விளைவாகவே எமதுஇளைஞர்கள்வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோகம்பிடித்து அங்கே சென்று பெருங்கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர்.

''வெளிநாட்டிலுள்ள எமது இளைஞர்கள் நாட்டிற்கு அனுப்பிவைக்கும் பணம் இதுவரை காலமும் காணிவாங்க வீடுகட்டவே உதவியது. ஆனல் இன்ருே அந்தப் பணத்தை முதலீடுசெய்ய வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இதற்கு நாம் பாரிய பொருளாதாரத் திட்டங்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

''இந்த வருடத்திற்கென நான் சமர்ப்பித்துள்ள மின்சாரத்திட்ட வேலைகள் நிறைவேறும் பட்சத்தில் உடுப்பிட்டித் தொகுதியில் மின்சாரப் பிரச்னை முற்ருக நீங்கப் போகின்றது என்பதை எனது தொகுதி மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.''

### பாதணி உற்பத்தி போதாது

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

''நான் கனடாவிற்குச் சென்றிருந்தபோது வடபகுதியில் உற்பத்திசெய்யப்படும்பாதணிகளை அங்கே விற்பனைசெய்வதற்கு முயற்சி மேற்கொண்டேன். அப்போது அங்குள்ளவர்கள் பெருந்தொகையான பாதணிகளை எம்மிடமிருந்து கொள்வனவு செய்வதற்குத் தயாராகஇருந்தார்கள்.

''ஆனல் என்னல் அவர்களது கோரிக்கைக்குப் பதிலளிக்கமுடியாமற் போய்விட்டது. காரணம் பெருந்தொகையான பாதணிகளை எமது பகுதிகளில் உடன் பெற்றுக்கொள்ளும்நிலை இன்னும் ஏற்படாததே.

### தென்னை நாற்றுக்கு ஏற்ற கிராமம் வதிரி

''எனது தொகுதியில் கடந்த வருடம் 15,000 தென்னங்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன. இத்தென்னங்கன்றுகள் தென்னிலங்கைப் பகுதிகளில் இருந்தே கொண்டுவரப்பட்டுள்ளன. தென்னங்கன்றுகளை உற்பத்திசெய்வதற்கு ஏற்ற நாற்று மேடைகளை அமைப்பதற்கு வதிரிக் கிராமம் ஏற்றதாக உள்ளது. அதனுல் எமது பிரதேசத்திற்குத் தேவையான தென்னங்கன்றுகளை இங்கேயே உற்பத்தியாக்கிக் கொடுக்க இப்பகுதிமக்கள் முன்வரவேண்டும்.''

யாழ். அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா, சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த செல்வி ஸ்டேர்லின் உட்பட மற்றும் பலர் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

---

## சிறுதானிய பயிர்செய்கை

(மட்டுவில்)

பூநகரிப் பகுதி வெல்விளை நிலங்களில் நெல் அறுவடைக்குப்பின் உடனடியாக சிறுதானியபயிர்செய்கையைவிவசாயிகளிடம் ஊக்கப்படுத்தும்முயற்சியில் பூநகரி போதனுசிரியர் திரு. சு. பாலசிங்கம் ஈடுபட்டுள்ளார்.

பயறு, உழுந்து, எள், கடலை, சோயா அவரை இலங்கைப்பருப்பு, சணல் போன்ற சிறுதானியப் பயிர்களை உற்பத்தி செய்வதையே இவர் ஊக்குவித்து வருகிருர். (வெ)

---

## "குறைகாண்பதை விடுத்து சீரான நிர்வாகத்தை ஏற்படுத்துவதுதான் பொதுச் சபையின் கடமையாகும்"

(சாவகச்சேரி)

'காலத்துக்குக்காலம் நெறியாளர் குழுவுக்கும் சிப்பந்திகளுக்கும் பயிற்சி வகுப்புகள் வைத்து வந்தாலும் பிழைகள் இருக்கத்தான் செய்யும். கடந்தகாலத்திலுள்ள நிர்வாகத்தில் பிழைகள் சில இருந்தாலும் முந்தியவற்ருேடு ஒப்பிடும்போது அவை மிகவும் குறைவாகும்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடந்த சாவகச்சேரிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டத்தில் வடபகுதி கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. வே. நடராசா மேற்கண்டவாறு கூறினுர்.

சங்கத் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடந்த கூட்டத்தில் கூட்டுறவு எண்பார்வைஆணையாளர்திரு. தி. சண்முகராசா, புடவைக் கைத்தொழில் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். விசுவலிங்கம், யாழ் ஸ்ரீலங்கா தேசீயக் கூட்டுறவுச்சபை மாவட்டச் செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம், கூட்டுறவு உத்தியோகத்தர்கள், கலந்துகொண்ட கூட்டத்தில் ஆணையாளர் திரு. நடராசா தொடர்ந்து கூறியதாவது:

சங்கப் பணியாளர்கள் சிலர் சில விஷயங்களை அறியாமலிருப்பர். சிலர் அறிந்தும் செய்யாமலிருப்பர். எனவே குறைகாண்பதை விடுத்து அடுத்த வருட நிர்வாகத்தை எவ்விதம் திறமையாக நடத்தலாம் என்பதைச் சிந்தியுங்கள். ஒரு சிறந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து ஓர் சிறந்த நெறியாளர் குழுவையும் அமைத்துசீராக நிர்வாகத்தை இயங்கவைப்பதுதான் பொதுச் சபையின் கடமை.

புடவைக் கைத்தொழில் உதவிப் பணிப்பாளர் எஸ். விசுவலிங்கம் உரையாற்றுகையில் கூறியதாவது;

சாவகச்சேரியில் நல்ல முறையில் இயங்கிவந்த ஒரு மின்தறி நிலையம் இயக்கம் தடைப்பட்டு இயங்கிவருவது, அங்கே இயங்கும் இயந்திரத்திற்கும் ஊழியர்களுக்கும் கூடிய பளுவைச் சுமத்தியதே பாதிப்புக்குக்காரண . அதாவது 24 மணித்தியாலமும் தொடர்ந்து வேலை மேற்கொண்டது தவறு. சங்கானை, பண்டத்தரிப்பைப் போலஇதை வரவிடக்கூடாது. ஓடமுடியாமலிருக்கும் யந்திரத்தை உடனடியாகத் திருத்தி நல்ல முறையில் இயங்க இனி மேல்வரும் நெறியாளர் குழு நடவடிக்கை எடுக்கவேண்டும். முடியாவிட்டால் ஒப்பந்த அடிப்படையில் கொடுத்தால் இதைச் சீரான முறையில் நடத்த நான் ஆவன செய்வேன்.

தேசீயக் கூட்டுறவுச்சபை ஸ்ரீலங்கா மாவட்டச் செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது:

பொதுச்சபை உறுப்பினர்கள் இடையிடையே சென்று இயக்குநர் சபை, பணியாளர்கள், சிப்பந்திகள் சங்கத்தில் என்ன செய்கிருர்கள் என்பதைப் பார்க்கவேண்டும். அதை விடுத்துத் தூங்கிக் கிடந்துவிட்டு வருடமொரு முறை பொதுச்சபை கூடுவதில் பயனில்லை. பொதுச் சபை உறுப்பினர்கள் 25 பேர் விரும்பியிருந்தால் வேண்டிய நேரத்தில் கூட்டங்கள் கூட்டியிருக்கலாம்—அங்கத்தவர் சங்கம் என்ற நிலை மாறிப் பணியாளர் சங்கம் என மாறும்நிலை ஏற்படுகிறது. பணியாளர்களுக்குரிய வாய்ப்பை அளிக்காதபடியால் அவர்கள் வேறு தொழிலை நாடிச் செல்கிருர்கள்.

இப்பொதுச்சபைக் கூட்டத்தில் நடந்த நெறியாளர் குழு தேர்தலில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். திருவாளர்கள் த. சிதம்பரப்பிள்ளை, சி. வ. வயித்திலிங்கம் தா. இராசநாயகம், ச. சரவணமுத்து, வே. தம்பிப்பிள்ளை க. ஆறுமுகம் வ. பேரின்பநாயகம். [க]

---

## தலைமன்னர் துறைமுகத்தில் லஞ்சப் பேய் ?

(மன்னர்)

தலைமன்னர் ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இந்தியா சென்றுவரும் பிரயாணிகளின் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

கடந்த சனிக்கிழமை கப்பலில் இடம் கிடைக்காத 800க்கும் மேற்பட்ட பிரயாணிகள் அடுத்தகப்பலை எதிர்பார்த்துத் தலைமன்னர் துறைமுகத்தில் காத்திருந்தனர்.

தலைமன்னர் துறைமுகத்தில் இந்தியாவுக்குச் செல்லும் பிரயாணிகளின்தொகை அதிகரித்துள்ளதையடுத்து லஞ்சம் வாங்குவோரின் தொகையும் அதிகரித்துள்ளது.

தலைமன்னர் துறைமுகத் தொழிலாளர் சிலரும், ரயில் திணைக்களத் தொழிலாளர்சிலரும் பிரயாணி ஒருவரிடம் ஆயிரம் ரூபா முதல் இரண்டாயிரம் ரூபா வரை லஞ்சம்கேட்டதாகப் பிரயாணிகள் புகார் தெரிவிக்கின்றனர். (அ)

---

### விசேட சேவை அலுவலர்

## யாழ்ப்பாணம், கோப்பாய் நியமன விபரம்

(யாழ்ப்பாணம்)

விசேட சேவை அலுவலர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களில் யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதிக்கு நியமனம் பெற்ருேர் பெயர், விபரம் வருமாறு;

எம். சுந்தரலிங்கம் (முஸ்லிம் வட்டாரம்), எஸ். அருள்ராசா (கொழும்புத்துறை. சுண்டிக்குளி), ஆர். அன்ரனி (குருநகர், யாழ். நகர்), கே. ஓங்காரமூர்த்தி (வண்ணுர்பண்ணை தென் கிழக்கு, தென் மேற்கு),

### கோப்பாய்த் தொகுதி

டி.ஜெகதாஸ் (உரும்பராய், ஊரெழு), எஸ் செல்வச்சந்திரன் (இருபாலை), கே. மகாலிங்கம் (பத்தமேனி, அச்சுவேலி), ஏ. குலேந்திரநாயகம் (கோப்பாய் வடக்கு, தெற்கு), கே. நாகேந்திரன் (புத்தூர் கிழக்கு, மேற்கு), எஸ். இரத்தினம் (சிறுப்பிட்டி நீர்வேலி) கே. அம்பிகைபாகன் (புன்னலைக்கட்டுவன், வசாவிளான்).

இரு கிராமசேவை அலுவலர்களுக்கு ஒரு விசேட சேவை அலுவலர் என்ற முறையில் இப்பதவி அமைக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்களின் சிபார்சின்பேரிலேயே இந்நியமனம் வழங்கப்பட்டது.

மற்றைய தொகுதிகளுக்கான நியமனம் பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் இன்னும் யாழ். செயயகத்திற்கு வந்துசேரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது, இன்று முதல் இந்நியமனங்கள் வழங்கப்படவிருக்கின்றன. (மா)

---

தொலைக்காட்சிப் பெட்டிகள்

## உள்நாட்டில் உருவாகும்

(கொழும்பு)

தொலைக்காட்சிப் பெட்டி உறுப்புகளை இறக்குமதிசெய்து உள்நாட்டில் அவற்றைப் பொருத்துவதற்கு அரசாங்கம் அனுமதியளிக்க முடிவுசெய்துள்ளது.

இவ்வாறு உறுப்புக்களை இறக்குமதிசெய்து தொலைக் காட்சிப்பெட்டிகளை நம்நாட்டிலேயே உருவாக்க அனுமதிப்பதன்மூலம், இறக்குமதிவரி குறைவடைவதுடன், தொலைக் காட்சிக் கைத்தொழிலில் பயிற்சிபெற்றவர்களுக்கு அதிக வேலைவாய்ப்புச்சந்தர்ப்பங்களைவழங்கமுடியுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது .(கி)

---

## இன்று திறக்கப்படும்

(கரவெட்டி)

நெல்லியடியில் நிறுவப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கிளை இன்று 10ம் திகதி புதன் கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

நெல்லியடி வதிரி வீதியில் நிறுவப்பட்டிருக்கும் இவ் வங்கிக் கிளையை யாழ். மாவட்ட அமைச்சரும், தப்டெனியா எம பி யுமான திரு யு. பி. விஜயக்கோன திறந்துவைப்பார் (அ)

“அபிவிருத்திகருதி காங்கிரஸ் அமைச்சர்களை

# அறிஞர் அண்ணு அழைத்துவந்து தொகுதிகளைச் சுற்றிக்காட்டினுர்

## இதனையே கூட்டணி செய்கிறது”

### அண்ணு நினைவு விழாவில் ‘நவம்’

(சாவகச்சேரி)

அறிஞர் அண்ணு டில்லியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். டில்லி பாராளுமன்றத்தை நன்கு பயன்படுத்தியுள்ளார். தொகுதி அபிவிருத்தி, தமிழகத்தின் வளர்ச்சி, விடுதலைக்கு முன்னேடி என உணர்ந்த அறிஞர் அண்ணு, காங்கிரஸ் ஆட்சியிலுள்ள காங்கிரஸ் மந்திரிகளான காமராஜர், பக்தவத்சலம் போன்றவர்களை அழைத்துத் தொகுதிகளைச் சுற்றிக்காட்டியுள்ளார்: டில்லி அரசின் அமைச்சர்களின் வைபவங்களில் கலந்து அச்சந்தர்ப்பங்களை தமிழகத்தின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல விடுதலையைப் பற்றியும் உரையாற்றியுள்ளார். இதேபோன்ற காரியங்களைத்தான் கூட்டணியினரும் செய்கின்றுர்கள்.

தென்மராட்சி முத்தமிழ்க் கலைமன்ற ஆதரவில் நடந்த கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினுர்.

முத்தமிழ்க் கலைமன்றத் தலைவர் திரு. அ. பொ. செல்லையா தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து கூறியதாவது:—

‘ஈழத்தமிழினத்தின் விடுதலைக்காக தமிழீழத்தை மலர்விக்கப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் கூட்டணியினரின் கொள்கைகள் பல அண்ணுவின் கொள்கைகள்’ போன்றவையேயாகும். தமிழகத்தில் அண்ணு ஆட்சி தொடர்ந்து நீடித்து நிலைத்து அசைக்கமுடியாதிருப்பதுபோல ஈழத்தமிழினத்தின் விடுதலையை வேண்டிநிற்கும் கூட்டணியினரின் செல்வாக்கை எவராலும் குறைந்திடமுடியாது.

சிங்கள அரசினருடன் கூட்டணியினர் பேச்சுவார்த்தை நடத்துகிருர்களென்றுல் காந்தி வழியில், அண்ணு வழியில் இரத்தம் சிந்தாமல் சமரச முறையில் வேண்டுவனவற்றை வேண்டுவதற்குரிய வழியாகுமேயல்லாது பேச்சுவார்த்தை வேறென்றல்ல இந்தியாவின் விடுதலைக்காக வின்ஸ்ரன் சேர்ச்சிலுடன் பேச்சுவார்த்தை நடத்தியவர் காந்தி பண்பற்ற ஆங்கிலத் தலைவர் உலக உத்தமர் காந்தியடிகளை ‘அரைநிர்வாணப் பக்கிரி’ என்று சொன்னுர். அதேபோலக் கூட்டணியினருக்கும பேச்சுவார்த்தையில் இழிவுகள், பழிவுகள் வரலாம் அதனுல் கூட்டணியினர் பாதை தவறுபவர்கள் என்பதல்ல.

‘விடுதலை என்றுல் அபிவிருத்தி தேவையில்லை என்பதல்ல. ஆதலால் சிலவிஷமிகள் திட்டமிட்டுக் கூட்டணிக்குள் குரோதங்களையும் விரோதங்களையும் உண்டாக்கி வளர்த்திட முயற்சிக்கிருர்கள். 1977 பொதுத்தேர்தலிலும் 1981 அபிவிருத்திச் சபைத்தேர்தலிலும் ஈழத்தமிழினத்தின் ஒன்றிணைந்த உணர்ச்சியைப் பார்தத பிறகும் இப்படிச் செய்கிருர்களே என்று நினைக்கக் கவலை தான் வருகின்றது.

ஆதலால் மேலும் தமிழினத்தின் ஒன்றிணைந்த உணர்ச்சிகளை சிதைகாது இருப்பதோடு மேலும் வலு வூட்டி தமிழ் ஈழம் மலர்வதற்கேற்ற வகையில் வெளிநாட்டவரும் எம்மைக்கண்டு மெச்சிட உலகமெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்கள் பூரிப்படைய காந்தி வழி, அண்ணுவழி அரசியலை நன்குணர்ந்து நாட்டுத்தொண்டாற்ற முன்வரவேண்டும்.

தலைவர் அ. பொ. செல்லையா பேசுகையில் ‘‘ஆரிய இனத்திலிருந்து வேறுபட்ட திராவிடஇனத்தை அதிலும் தமிழினத்தை உலகுக்குக் காட்டிட முயற்சித்த பெருந்தலைவர் பேரறிஞர் அண்ணு தமிழினத்தின் அரசியல் அடிமைத்தனத்தை முற்றுகக் களைந்திடதமிழ் மக்கள் சிறந்த பகுத்தறிவு வாதிகளாகவும் சமரச நோக்குடையவர்களாகவும் இருந்திட வேண்டுமென்பதற்காக இயற்கைக்கு ஒவ்வாத கடவுள் கொள்கைகளைக் களைந்திட அறியாமையை அகற்றிட தீண்டாமையைத் தீர்த்திட முரசொலித்து முழக்கஞ் செய்தவர் பேரறிஞர் அண்ணு. என்றுர்.

ஆசிரியபணி ஆர், ரீ. சுப்பிரமணியம் கே. கே. பிள்ளை ஆசியோரும் பேசினர். (க)

---

## இடமாற்றம்

(சாவகச்சேரி)

யாழ். கச்சேரி அபிவிருத்திச் செயலகத்திலிருந்து அரியாலையைச் சேர்ந்த மு. மகேஸ்வரன் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர்பணிமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (க)

---

## மீனவர் கூட்டுறவுச் சங்கம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மீனவர் கூட்டுறவுச் சங்க பருத்தியடைடைப்புக் கிளையின் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. நா. ஆறுமுகம், உபதலைவர்: திரு. ஆ. இரத்தினசாமி, செயலாளர்: திரு. நா. சிவபாலன், உறுப்பினர்: திருவாளர்கள்: மு. இராஜகோபால், மா. குணராஜா, மு. சோமஸ்கந்தன்.

கூட்டத்திற்கு ஊர்காவற்றுறை கடற்றெழில் பரிசோதகர் திரு. எஸ். விக்னேஸ்வரன், ஊர்காகாவற்றுறை மீனவர் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் திரு. மு. சி. திருநாவுக்கரசு ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

---

சமாதான நீதவான்



யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைச் சேர்ந்த ‘முல்லைக்கவி’ பா. அமிர்தநாயகம் யாழ். மாவட்டநீதிபதி திரு. கி.பாலகிட்ணர் முன்னிலையில் சமதானநீதவாஞகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். பிரபல கட்டிட ஒப்பந்தகாரரான இவர் சிறந்த சமூக சேவையாளரும், நாடக ஆசிரியரும், நடிகனும், மேடைப் பேச்சாளருமாவார். ‘‘கவிஞர் முல்லைக்கவி’’ என்னும் புனை பெயரில் இலக்கியத்துறையில் ஈடுபட்டுவரும் இவரது கவிதைகள், கட்டுரைகள், கதைகள் பல வானெலி, பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன.

இவர் எழுதிய ‘‘அரிச்சந்திராமயானகாண்டம்’’ (தென்மோடி) ‘‘கவிஞன் கண்ட கனவு’’, ‘‘சீதா கல்யாணம்’’ போன்ற நாடகங்கள் பல தடவைகள் மேடையேற்றப்பட்டு வானெலியிலும் தொடர் நாடகங்களாக ஒலிபரப்பப்பட்டு ரசிகர்களினது பாராட்டுக்களைப் பெற்றன. இவரால் உருவாக்கப்பட்ட நாடக மன்றங்கள் பல இன்றும் சிறப்பான முறையில் இயங்கி வருகின்றன.

---

# “பக்தி அருகியதாலேயே வன்செயல்கள் அதிகரிப்பு”

(சாவகச்சேரி)

‘‘இன்றைய இளைஞர்கள் தான் எதிர்காலச்சந்ததியினர். ஆகவே இவர்கள் காந்தியின் கொள்கைகள், லட்சியங்கள் என்பவற்றைத் தவருது பின்பற்றவேண்டும். அவரது சத்திய சோதனைபோன்ற நூல்களைப்படிக்கவேண்டும். தாய் தந்தை குரவர்களைத் தெய்வம் போல மதித்து நடக்கவேண்டும். அப்பொழுதுதான் சமய நம்பிக்கை உண்டாகி நாட்டில் வன்செயல்கள் குறைவடையும்’’.

அல்லாரை காந்தி சேவா சங்கத்தலைவர் திரு கே. கே. கணபதிப்பிள்ளையின் தலைமையின் கீழ் கழக மண்டபத்தில் நடந்த காந்திஜீயின் 34வது சிரார்த்த தின வைபவத்தில் உரையாற்றிய ஆசிரிய மணி ஆர் ரீ. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினுர்.

மேலும் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடவுள் பக்திமக்களிடையேஅருயகிமையினுலேயேநாட்டில் இன்றுவன் செயல்கள் அதிகரித்து வருகன்றன கிழமைக்கொருமுறையாவது மக்கள் இளைஞர்கள் கூட்டுப்பிரார்த்தனைகளில் ஈடுபடவேண்டும். காந்திஜீ எந்த அரசியற் கூட்டத்தைத் தொடங்குர்போதும் சம நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்தே தொடங்கினுர் வெற்றியும் கண்டார்.

முத்தமிழ் மன்றத்தலைவரும் பளை மகாவித்தியாலய அதிபருமாகியதிரு அ.பொ.செல்லையா பேசுகையில் கூறியதாவது: அரசியல்வாதிகளுக்குள்ளே தலைசிறந்த உத்தமராக மதித்துப் போற்றப்படுபவர் காந்தியடிகள் பெரும் பெரும் தலைவர்களாம் நேருஜி, மாசேதுங், ஸ்ராலின், சேர்ச்சில் போன்றவர்கள் எதிர்ப்பின் மத்தியில் வாழ்ந்தார்கள். ஆனுல் எதிர்ப்பின்றி வாழ்ந்தவர் அண்ணல் காந்தி. இவர் கடந்த 5000 ஆண்டுகளாக வாழ்வின் மிகச் சாதாரணபண்பாகப் போற்றி வந்துள்ள தமிழர் நெறியாம் அன்புமார்க்கத்தை அகில இந்தியாமுழுவதும் பரப்பியதால இமயத்திலிருந்து குமரிவரை ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே தலைவனுகவிளங்கியதால் அவர் மகாத்மா ஆனுர்.

மனித சமுதாயத்தின் இரக்கமற்ற அரக்கத்தனமான கீழ்த்தனமான கொள்கை கோட்பாடு தீண்டாமையாகும். அந்தந் தீண்டாமை என்னும் கொடிய அரக்கனை வேரோடு சாய்த்திடப்பாடுபட்ட ஒரே தலைவன் காந்தியடிகளே.

எடுத்துக்கொண்ட கோட்பாடுகளில் இம்மியளவேனும் வழுவாது தனது எண்ணத்தைக்கை வண்ணமாகக்காட்டி எடுத்துக்காட்டாக வாழ்ந்த உதாரண மனிதன் காந்தியடிகள்

உயர்ந்த தலைவர்களில் முதன்மை பெற்றிருந்தும் அகிலம் போற்றும் அண்ணலாக இருந்தும் எளிமையாக மிகவும் அருமையாக வாழ்ந்த காந்தியடிகள் மனிதருக்குள்ளே ஒரு மாணிக்கமாக விளங்கினுர். (க)

---

# நீதிமன்றக் கட்டளையை மீறியவர் றிமாண்டில்

(சாவகச்சேரி)

வேலுப்பிள்ளை இராசரத்தினம், ஏ. இராசத்தினம் (தாசன்), சி. புவனேஸ்வரன், ஆகியோர் வன்னியன்பாலை என்னுமிடத்தில் 9,900 ரூபா பெறுமதியான 28 எருமை மாடுகளைக் களவாடினுர்கள் எனக்குற்றஞ்சாட்டி சாவகச்சேரிப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பளை சுற்று நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப். எம்.எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொளப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிசார் எடுத்த தீவிர முயற்சியின் பலனுகப் பல எருமைமாடுகளை மீட்டனர். சில எருமை மாடுகள் வெட்டியபடி மீட்டதும் குறிப்பிடத்தக்கது. எதிரிகளாகிய மூவரும் தலா 3,500 ரூபா பிணையில் விடுபட்டு பதினுன்கு நாட்களுக்கொரு முறை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டுமெனப் பணிக்கப்பட்டிருந்தது.

இக்கட்டளையை 1ம் எதிரி வேலுப்பிள்ளை இராசரத்தினம் மீறியபடியால் அவரை இரண்டு கிழமை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி எம். எச். காரியப்பர் உத்தரவிட்டார்.

---

பெண்ணிடம் சங்கிலி வழிப்பறி வழக்கு:

# ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை, ரூ.250 அபராதம்

## இரத்ததானம் வழங்குமாறும் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பெண்ணிடம் சங்கிலி அறுத்த ஒருவருக்கு யாழ். நீதிமன்ற நீதவான் ரி. ஜோகநாதன் 5 வருஷம் ஒத்திவைக்கப்பட்ட 6 மாதக்கடூழியச் சிறையும், 250ரூபா குற்றமும், யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்கு இரத்ததானம் வழங்கும் படியும் உத்தரவிட்டார்.

அத்தியடியைச் சேர்ந்த திருமதி தர்மதேவி ஸ்ரீசுப்பிரமணியம் என்பவரின் ஆருயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியை அறுத்து வைத்திருந்ததாக யாழ். புகையிரதநிலைய வீதியைச்சேர்ந்த ஆனந்தம் இந்திரகுமார், பலாலிவீதியைச்சேர்ந்த தம்பிஐயா சந்திரசேன ஆகியோர் கைது செய்யப்பட்டு யாழ் பொலிஸ் குற்றத்தடுப்பு பகுதி இன்ஸ்பெக்டர் கே. ஸ்ரீதரனுல் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதவான், 1ம் எதிரிக்கு மேற்குறிப்பிட்ட தணடனைகளும் விதித்து, 2ம் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து கைவிரலடையாளங்களைப் பதிவு செய்யும்படியும் இம் மாதம் 15ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

களவாடப்பட்ட சங்கிலியும் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டது. (மா)

# "சமுதாயத்தின்பெருமையை விளையாட்டுக்ள்மூலம் சாதிக்கலாம்"

-- துரைரத்தினம் எம். பி.

(புலோலி)

"தமிழ் மக்களுக்கு விளையாட்டுக்கள் புதியன அல்ல. ஒரு சமுதாயத்தின் பெருமையையும், சிறப்பையும் விளையாட்டுக்கள் மூலம் சாதிக்க முடியும்" என்று பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் வட அல்வை குமுதெணி சனசமூகநிலையம், மக்கள் படிப்பகம், விக்கிரமன் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடாத்திய மூன்றுவது கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இப்பரிசளிப்புவிழா சட்டத்தரணி திரு. மு. சிவகுருநாதன தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை எம். பி. தொடார்ந்து பேசுகையில் சொன்னதாவது:

"எமது இளைஞர்களுக்குக் கல்வியும், விளையாட்டும் இரு கண்களைப் பேரன்றவை. எதையும் சாதிக்கும் வலிமையும், மனத்திண்மையும், நேர்மையும் இளைஞர்களுக்கு அவசியம். இதனை விளையாட்டு மைதானங்களே புகட்டக்கூடியன.

இதனாலேயே விளையாட்டு மைதானமும் வெறும் மைதானமாக இராது ஒரு கலாசாலையைப் போன்று விளங்குகின்றது. இங்கேதான் மக்களுக்கு இடையே பேதங்களும், போட்டி பூசல்களும் மறைகின்றன. எமக்கு இடையே எதுவித வேறுபாடுகளும் இருக்கக்கூடாது".

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கமும் பேசினார். (அ)

## இராசலிங்கத்துக்கு 'சிவா' பொன்னாடை!

(கரவெட்டி)

தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம், உடுப்பிட்டி எம். பி.க்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இவ்வைபவம் வதிரி சதிர்காம கோவிலடி கைத்தொழில் நிலைய மண்டபத்திறப்பு விழாவின் போது இடம்பெற்றது.

திரு. சிவசிதம்பரம் உடுப்பிட்டி எம். பி. க்குப் பொன்னாடை போர்த்திவைத்துப் பேசுகையில், "உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் இத்தொகுதியில் இதுவரை காலமும் செய்த அரும்பெரும் சேவைகளைப் பாராட்டும் முகமாகவே இப்பொன்னாடையைப் போர்த்துகினறேன். இது எனக்குப் பெருமையை அளிக்கின்றது" என்றார். (அ)

## பதிவு செய்ய முயற்சி

(பாணந்துறை)

முன்னாள் பாணந்துறை ஐக்கிய தேசியக்கட்சி எம். பி. டாக்டர் நெவில் பெர்னாண்டோ தாம் புதிதாக ஆரம்பித்துள்ள கட்சியான 'லங்கா ஜாதிக பெரமுனவை' அங்கீகரிக்கப்பட்ட கட்சியாகப்பதிவு செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

வழமையான சட்டநடைமுறைகளுக்கிணங்க டாக்டர் பெர்னாண்டோ தமது கட்சியின் அங்கத்தவர்களது பெயர் பட்டியலையும் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளார். (கி)

## புதிய விஞ்ஞான மனையியல் ஆய்வுகூடம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலையில் சுமார் 2 லட்சம் ரூபா செலவில் விஞ்ஞானமனையியல்கூடம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

வித்தியாசாலை அதிபர் திரு மதி கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறற வைபவத்தில் யாழ். பிரதி திட்டமிடல் அதிபர் திரு. எ. ம. சிவதாசன் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார். (இ)

## நிர்வாகிகள்

(துணுக்காய்)

கடந்த ஒருவருடமாக துணுக்காய் பகுதி ப. நோ. கூ. சங்க நெறியாளர் குழு இன்றி இயங்கிவந்தது. இச் சங்கத்தில் 1980 மார்கழியில் தேர்தல்கள் நடைபெற்று பின்பு கூட்டணி ஐக்கியதேசிய கட்சி உறுப்பினர்கள் சட்டப் பிரச்சனைகள் கிளப்பியமையால் தேர்தல் தள்ளுபடி செய்யப்பட்டு இவ்வளவு காலமும் இயக்குநர்சபையின்றி இயங்கி வந்தது. கடந்த 20ம் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் புதிய தலைவர் நெறியாளர்கள் தெரிவாகினர்

திரு. ஆ. மா, பூபாலசிங்கம் தலைவர், திரு. ப. மயில்வாகனம் உபதலைவர். இயக்குநர்கள்: திரு. வி தியாகராஜா திரு. கு. சதானந்தம், திரு. ஐ, சண்முகராசா, திரு. பா. நித்தியானந்தம், திரு. மு. நவரத்தினம் ஆகியோர்.

ஃ ஃ ஃ

(சுழிபுரம்)

பண்ணாகம் ஐக்கிய நாணய சங்க புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

தலைவர்: அ. நடராசா. உப தலைவர்: இ. ஆறுமுகம், காரியதரிசி: சி. தியாகராசா, உப காரியதரிசி: இ. தம்பிராசா. தனாதிகாரி: மா விசுவலிங்கம்.

ஆறுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிசெய்யப் பட்டறி.

## அணுகுண்டுக்கானயுரேனியம் புத்தளத்தில் கண்டுபிடிப்பு

(புத்தளம்)

அணு குண்டு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் அதிமுக்கிய மூலப் பொருளான 'யுரேனியம்' புத்தளம் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புவியியல் ஆராய்ச்சிப் பகுதியினர் மேற்கொண்ட நில ஆய்வொன்றின் போதே கனிப் பொருளான மேற்படி 'யுரேனியம்' வளம் புத்தளம் மாவட்டப்பகுதியில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(7ம் பக்கம் பார்க்க)

## தமிழோசையில் ஆர்ச் பிஷப் பேட்டி

(லண்டன்)

கான்டர்பரி ஆர்ச் பிஷப் வணக்கத்திற்குரிய டாக்டர் ராபர்ட் ரன்ஸி அண்மையில் சீனா, ஹாங்காங், பர்மா, இலங்கை ஆகிய இடங்களுக்கு விஜயம்செய்தார். தாயகம் திரும்பிய டாக்டர் ரன்ஸியை அவர்தம் இலங்கை அனுபவம் பற்றி தமிழோசை தயாரிப்பாளர், திரு. சங்கரமூர்த்தி பேட்டிகண்டு, ஜனவரி இரண்டாம் தேதி ஒலிபரப்பினார்.

இந்த விஜயத்தில் டாக்டர் ரன்ஸிஇலங்கையில் கொழும்பு கண்டி, குருணாக்கல் ஆகிய இடங்களுக்குப் போய்ப்பார்த்தார். கிறிஸ்தவமதத் தலைவர்களையும், பௌத்த மதத் தலைவர்களையும் அவர் சந்தித்து உரையாடினார். மற்றும் அனுராதபுரம், பொலன்நறுவா ஆகிய தொன்மைச் சிறப்புள்ள இடங்களுக்கும் சென்றுவந்தார் ஆர்ச் பிஷப் ரன்ஸி.

'பி. பி.சி.யின் தமிழோசை' சனி, ஞாயிறு (வண்ணக்கதம்பம்)செவ்வாய்,வியாழன்ஆகிய நாட்களில் ஒலிபரப்பாகிறது. இந்திய—இலங்கை நேரப்படி பிற்பகல் 3 மணி முதல் 3 30 வரை, 16 மீற்றர் அலைவரிசையிலும், இரவு 9 45லிலிருந்து 10 15வரை, 25, 41, 49 ஆகிய மீற்றர்களிலும் (11·955 7·155,6·165 மெஹாஹர்ட்ஸ்) கேட்கலாம்.

காப்புறுதிக்கு
எய்ற்கன் ஸ்பென்ஸ்
நிகரற்ற சேவைக்கு நெடுங்காலப் புகழ் பெற்ற நிறுவனம்

106 ஆண்டுகளுக்கும் மேலாக, லண்டன் லொயிட்ஸ்
நிறுவனத்தின் பிரதிநிதிகளாகப் பணியாற்றிய எய்ற்கன் ஸ்பென்ஸ்,
இலங்கையில், காப்புறுதித் துறையின் முன்னோடி.
ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட இந்தக் காலத்தில்,
சேவைக்கும் நம்பிக்கைச் சிறப்புக்கும் புகழ் பெற்ற
நிறுவனமாகப் பெயர் பெற்று விட்டோம்.
நேர் நிகரற்ற இந்த அனுபவத்தை, தற்போது,
தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின்
பிரதான பிரதிநிதிகள் என்ற முறையில்,
மேலும் சிறப்பாகப் பயன்படுத்துகிறோம்.
எனவே, (ஆயுள், தீ விபத்து, ஆள் விபத்து, மோட்டார்,
கடல் அபாயம். திருட்டு போன்றவைக்கான)
உங்கள் காப்புறுதித் தேவைகள் அனைத்துக்கும்
எம்மை நாடுங்கள். எங்கள் பரம்பரைச் சிறப்பின்
பெருமைக்குரிய நம்பிக்கை வாய்ந்த உன்னத சேவையை,
நாம் உங்களுக்கு வழங்குவோம்.

எய்ற்கன் ஸ்பென்ஸ்...
என்றாலே காப்புறுதி!

எய்ற்கன் ஸ்பென்ஸ் அண்ட் கம்பனீ லிமிட்டெட்
தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனப் பிரதான பிரதிநிதிகள்
315, வக்சோல் வீதி, கொழும்பு 2.
தொலைபேசி: 24604-6. 25400, 23399.

கிளைச் செயலகங்கள்:
கிளேன் இல்லம், 24 கோயில் வீதி, காலி. தொலைபேசி: 09-2083
290, உட் துறைமுக வீதி, திருகோணமலை. தொலைபேசி: திருமலை 453
95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: யாழ்ப்பாணம் 7603

## மாணவர் சமுதாயம்

## நன்மையான செயல்களைச் செய்துபழக வேண்டும்"

(மட்டுவில்)

"இளம் வயதிலிருந்தே நன்மையான செயல்களைச் செய்ய மாணவர் சமுதாயம் பழகிக்கொள்ள வேண்டும், அதுமட்டுமல்ல எமது பண்டைய இலக்கியங்களை படிப்பதிலும் இலக்கிய சுவையை சுவைத்து உணர்ந்து கருத்தில் கொள்ளவும், சகல மத சமூக தமிழ்த்தின தமிழ் இலக்கிய விழா வைபவங்களில் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளவும் ஏற்றது மாணவர் பருவமே எனவே தான் கல்வி இலாகா பாடசாலைகளில் இப்படியான விழாக்களை எடுப்பதில் ஆர்வம் கொடுத்து வருகிறது. இந்த வசதிகளையும் வாய்ப்புகளையும் ஆசிரியர் பெற்றார் மாணவர்களும் ஏற்றவகையில் பயன்பட வழிகாட்டிகளாகவும் முன்னோடிகளாகவும் அமைய வேண்டும்"

இவ்வாறு கைதடி குருசாமி வித்தியாலயத்தில்நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் பிரதம விருநதினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ் கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு சபாநாயகம் கூறினார். வித்தியாலய அதிபர் திரு. சு. கனகசபாபதியின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும், வட்டாரக் கல்வி அதிகாரி திரு சி. தியாகராஜாவும் மங்கள விளக்கேற்றி திறந்து வைத்தனர்.

வட்டாரக் கல்வி விதிகாரி திரு, சி. தியாகராஜா பேசுகையில் மாணவர் மத்தியில் தமிழ் மொழிமீது ஆர்வம் வேண்டும். அதை ஆர்வத்துடன் கற்கும் மனப்பாங்கு வளர வேண்டும். நூல்நிலையங்கள் சென்று நூல்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகள் படிப்பதில் ஆர்வம் காட்டிப்படிக்க வேண்டும். ஒழுக்கம் பாடசாலை வரவு ஆகியனவும் மாணவர் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய நல்ல அம்சமாகும்.

பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. பிரதம கல்வி அதிகாரி திரு. சபாநாயகம் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
வெல்லி ..ணிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
நூல்வேலி

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்...ஜெய்சித்ரா நடித்த
கலைஞர் மு. கருணாநிதியின்
வண்டிக்காரன் மகன்

## உற்சவம்

(புலோலி)

பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் இம் மாதம் 14ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இம்மாதம் 22ம் திகதி இரதோற்சவமும் 23ந் திகதி தீர்த்தோற்சவமும், 26ம் திகதி தெற்போற்சவமும் நடைபெறவுள்ளன உற்சவகாலங்களில் தினமும் இரவு 7மணி தொடக்கம் 8 மணிவரை பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா கந்தபுராண இன்னிசை விரிவுரை நிகழ்த்துவார். (அ)

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
2-2-82
'குரு' கடைசி தினமும் 152வது நிறைவு தினமும்
13th "THREE THE HARD WAY"

Regal Cinema தினசரி 10—30, 2—15, 4—30, 7—00, 9—30
(Jaffna) T.le. 360.
CHARLS BROWN in
SREET FIGHTER

12-2-82 முதல்
தனிமரம்

மனோகரா (யாழ்ப்பாணம்) 10—30, 2—15, 4—45, 7—00, 9—30
FIVE ANGRY WOMEN
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

ராணி (யாழ்.நகர்) தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் தினசரி 10:30, 2:30, 6:00, 9:30
யாழ். நகர் சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதிய பிரதி)

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை

Rajah JAFFNA
LOVE BUG'S RETURNS
Daily 10—30, 2—00, 4—30, 7—00, 9—30
WALT DISNEY Present
HERBIE GOES TO MONTECARLO
(Color by Technic
For School Children Contact Management

WINDSOR (JAFFNA) Daily 5 Shows
Grand Gala Release
'Airport '80 – The Concorde'
starring: Alain Delon, George Kennedy Susan Blakely.

இரு மடங்கு ஒலி வேகத்தில் செல்லும் 'கொங்கோட்' விமானம் பாரிஸ் நகரத்திற்குத் தனது கன்னிப் பயணத்தைத் தொடங்குகின்றது. அதிவிசேஷ பயிற்சி, அனுபவம், ஆற்றல் மிக்க விமானிகள் அதைச் செலுத்துகின்றார்கள். திடீர்த் தாக்குதலினால் பிரயாணிகளின் உயிர்கள் ஊசலாடுகின்றன. விமானிகள் எப்படி இதைச் சமாளிக்கின்றார்கள் என்பதை வெண்திரையில் காண்க.

## இன்றைய பலன்

தை மாதம் 28 ம் திகதி
சனிக்கிழமை
(10—2—82)

மேடம்: அன்புக் கரங்கள் அணைக்கும். அதிர்ஷ்டதேவதையின் பார்வை கிட்டும் தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும்.

இடபம்: தொழில் துறையில் நன்மாற்றங்கள் ஏற்படும் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகள் கிடைக்கும். இன்று சுபதினம்.

மிதுனம்; சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும் பிதாவழி சுகமும் கிடைக்கும். கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு. முதியவர் ஒருவரின் அறிவுப் முன்னேற்றத்தை அளிக்கும்.

கடகம்: துன்பத்தில் நிழல் தொடரும் புதுமுதலீட்டை இன்று தவிர்த்துக் கொள்ளவும் பிரயாணத்தை இன்று பின் போடுவது விரும்பத்தக்கது.

சிங்கம்: குடும்பத்தில் சுகக் குறைவு தென்படலாம். அதிக அலைச்சலின் மூலம் கவலைகள் உருவாகும். முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை போடுவதற்கு முயற்சிகள் நடைபெறும். உணர்ச்சி வசப்படாது இருப்பது விரும்பத்தக்கது.

கன்னி: மேலதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கு இன்று நல்ல நாள். இனசனங்கள் மத்தியில் செல்வாக்கு வளரும். குடும்பத்திலும் இன்பமான சூழ்நிலை தென்படும்.

துலாம்; துஷ்டர்கள் உறவு உங்களைச் சங்கடத்தில் மாட்டி வைக்கும். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்களை தவிர்த்துக் கொள்ளவும். உணர்ச்சி வசப்படாதிருக்சவும்.

விருட்சிகம்: கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதப்பீர். கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும். வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர் சுபதினம்.

தனு: இதயங்கள் இணைவதற்கு இன்று நல்ல நாள். அபிப்பிராய பேதங்கள் மறையும் பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் பந்துக்கள்ஆதரவுபெருகும் குடும்பத்தில் அமைதி நிலவும்.

மகரம்: தூரதேசவாசம் உங்களை துயரத்தில் ஆழ்த்தும் எதிர்பாராத விபத்துக்கும் இடம் ஏற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும்.

கும்பம்: கன்னல் போல் இனிக்கும் வாழ்க்கை காதலில் வெற்றியுண்டு. பசுமையான நினைவு ஒன்று தலைதூக்கும். இல்லத்தில் இணைப்பு இறுகும். வெளியிடத் தொடர்புகளும் திருப்தியாக இருக்கும் இன்று சுபதினம்.

மீனம்: பிரச்னைகள் மேலும் சிக்கலாகும் உணவு விடயத்தில் பிரியக்குறைவு தென்படும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருப்பது நன்று. உடல் நலனில் அதிக கவனம் வேண்டும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## அபராதத்துடன் எச்சரிக்கை

[சாவகச்சேரி]

சின்னத்துரை சிவராசசிங்கம் என்பவர் சாரதிப் பத்திரமின்றி, மினிபஸ் ஒன்றைச் செலுத்தியதாகச் சாவகச்சேரிப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு, சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்றத்தில் நீதிபதி எஸ்.யேசுதாசன் முன்னிலையில் விசாரணைசெய்யப் பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ளவே நீதிபதி 175 ரூபா அபராதம் விதித்து, இனிமேல் இம்மன்றுக்கு வந்தால் சிறைக்குச் செல்லவேண்டிவருமென எச்சரித்தார்.

சுழிபுரத்தில்

# 3 வீடுகள் தீக்கிரை!

## ஒரு கொலையின் எதிரொலி?

(மாவிட்டபுரம்)

சுழிபுரம் காட்டுப்புலம் என்னுமிடத்தில் இடம்பெற்ற கொலைச்சம்பவத்தின் எதிரொலியாக அவ்விடத்தைச்சேர்ந்த 3 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாம்.

சுழிபுரம் காட்டுப்புலத்தை சேர்ந்த கந்தன் கார்த்திகேசு (வயது 38) என்னும் விவசாயி தோட்டத்திலிருந்து வீடுதிரும்பிக் கொண்டிருந்த சமயம் அவரை வழிமறித்த ஆறுபேர் வாளாலும், கத்தியாலும் வெட்டி, பொல்லு, இரும்புக் கம்பி என்பவற்றால் தாக்கிக் கொலை செய்ததாக விசாரணை நடைபெற்றுவருகிறது.

இச்சம்பவத்தையடுத்து அவ்விடத்தைச் சேர்ந்த 3வீடுகள் இனந் தெரியாதவர்களினால் தீக்கிரையாக்கப் பட்டுள்ளது. கொலைச்சம்பவம் குறித்துத் தேடப்படும் சந்தேக நபர்கள் மூவரது வீடுகளே இவ்வாறு தீயிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சம்பவத்தை நேரில் கண்டதாக மாதன் பாலசிங்கம் என்பவர் மேற்படி சந்தேகநபர்கள் குறித்துத் தெரிவித்துள்ளதாகப் பொலிசார்தெரிவித்தனர். கொலையுண்டவரது உடலில் 7 வெட்டுக்காயங்கள் இருந்ததாகவும், மிகவும் பெரிதாக இருந்த இக் காயங்களால் இரத்தப்பெருக்கு ஏற்பட்டு அவர் இறந்து கிடந்ததாகவும் ஸ்தலவிசாரணைமேற்கொண்ட பொலிசார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறைப்பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. ஐயாத்துரை சார்ஜன்ட் எஸ். சுந்தரநாதன் தலைமையிலான பொலிசார் மேலும் இது குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். (அ)

சமைக்க மறுத்த

## மகளைத் தந்தைகண்டித்தார்; மகள் தற்கொலை

(மன்னார்)

சாப்பாடு சமைக்க மறுத்த மகளைத் தந்தை கண்டித்தார். கண்டிப்பைத் தாங்கமுடியாத மகள் கிருமிநாசினி அருந்தி உயிரைப் போக்கிக் கொண்டார்.

அடம்பன் இத்திக்கண்டல் கிராமத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் லட்சுமி (வயது 18) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவரது மரணம் தொடர்பாக இறந்தவரின் தந்தை ஐயாத்துரை சாட்சியமளிக்கையில், "மகளைச் சாப்பாடு சமைக்குமாறு சொன்னேன். அவர் மறுத்துவிட்டார். இதனால் மகளைக் கண்டித்தேன். எனது கண்டிப்பைப்பொறுக்க மாட்டாத மகள் கிருமிநாசினியை அருந்திவிட்டார். இவரை உடனடியாக அடம்பன் அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றோம். அங்கு அவர் மரணமானார்" என்றார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். இராசதுரை தற்கொலை என தீர்ப்பளித்தார். (அ)

## லொறி கையளிக்கப்பட்டது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்றத்தில் களவாக மரம் ஏற்றியதாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த லொறி சம்பந்தமான வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

லொறி உரிமையாளர் கே. இரத்தினம் சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம் ஆஜராகி வாதிடுகையில், "களவாக மரம் ஏற்றிய சம்பவம் ஒன்றும் இவருக்குத் தெரியாது. அதில் ஈடுபட்டவர்கள் தண்டனையைப் பெற்றுவிட்டார்கள். மரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட எதிரிகள் இருவரையும் இவர் வேலை நீக்கஞ் செய்துவிட்டார். இதற்கு முன் இவர் எந்தவிதமான குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லை. ஆகவே இவரை மன்னித்து, இவரது லொறியைத் திருப்பிக் கொடுக்கவேண்டும்" என்றார்.

இதனைத் தொடர்ந்து நீதிபதி எம். எச். காரியப்பர் இனிமேல் இந்த லொறி இம்மன்றுக்கு வந்தால் பறிமுதல் செய்யப்படுமென லொறி உரிமையாளரை எச்சரித்து, லொறியைக் கையளிக்குமாறு உத்தரவிட்டார்.

## அபராதம்

[வேலணை]

பாரம்கூடிய பொருட்களை ஏற்றி அபாயகரமான முறையில் வானைச் செலுத்திய புங்குதீவைச் சேர்ந்த த. கயிலாயநாதன் என்பவருக்கு வேலணை ஆரம்ப நீதிமன்ற நீதவான் திரு. ஜே. விஸ்வஜோதி 50 ரூபா அபராதம் விதித்தார்.

வானில் 15 பேரை கூடுதலாக ஏற்றியமை, உரிய தகுதியுள்ள சாரதிப் பத்திரமின்றிவானைச் செலுத்தியமை, ஆகிய குற்றச்சாட்டின் பேரில் புங்குடுதீவைச் சேர்ந்த அ. நவரத்தினம் என்பவருக்கு 150 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

15 பேரை கூடுதலாக வானில் ஏற்றிய புங்குடுதீவு ப. தம்பிராசாவுக்கு 90 ரூபாவும், 11 பேரைக் கூடுதலாக ஏற்றிய புங்குடுதிவு ம. கண்ணையாவுக்கு 60 ரூபாவும், தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய வேலணை கிழக்கு ச. வாமதேவனுக்கு 25 ரூபாவும் வேலணை ஆரம்ப நீதிமன்றத்தில் அபராதமாக விதிக்கப்பட்டது. [இ]

## தலைக்கவசம் அணியாததால் ரூ. 120 அபராதம்

(சாவகச்சேரி)

தலைக்கவசமில்லாமல் மோட்டார் சைக்கிள் ஓட்டிய ஒருவருக்கு சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்றம் 120 ரூபா அபராதம் விதித்தது.

துரைசிங்கம் ஜெயசேகரம் என்பவர் தலைக்கவசமில்லாமல் மோட்டார் சைக்கிள் ஓட்டியதாக சாவகச்சேரி பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட இவ்வழக்கை விசாரணை செய்த நீதவான் திரு. எஸ். யேசுதாசன் 120 ரூபா அபராதம் விதித்தார். (அ)

## வரி விளம்பரம்

விற்பனைக்கு

Hitachi SDT 7660 Music Centre (திறீ இன் வண்) Yamaha R S 125 E Torque Induction 80 Sri 9771 ஒரு கை பாவிப்பில் உள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி "இந்திரா பில்டிங்" (கைத்தொழில் பேட்டைச் சந்தி) சங்கானை வீதி, அச்சுவேலி. 2225

பளம் ரேட்டில் ஒருபரப்பு காணி விற்பனைக்குண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம். 30, பளம் ரேட், கந்தர் மடம், யாழ்ப்பாணம். 2230


# "தேவராசா துவக்குடன் ஓடுவதை டோர்ச் வெளிச்சத்தில் கண்டேன்"

## கம்பர்மலை அறுவர் கொலைவழக்கில் சாட்சியம்

(புலோலி)

"சம்பவதினமிரவு வெடிச் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து நான் எனது மகன் நாராயணசாமி அழகம்மா வீட்டுப் பக்கமாகப் போனபோது சிலர் ஓடுவதைக்கண்டேன். பின்னே சென்ற தேவராசா துவக்குக் கொண்டோடினுர்.

இவ்வாறு கம்பர்மலை அறுவர் கொலை வழக்கு விசாரணையில் சாட்சிய மளித்த கம்பர் மலையைச் சேர்ந்த இராசா ஸ்ரீரங்கம் (வயது 64) குறிப்பிட்டார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வரும் இக்கொலை வழக்கில் தொடர்ந்து சாட்சியமளித்த ஸ்ரீரங்கம் குறிப்பிட்டதாவது:

"25.7.81 எனக்கு ஞாபகமுண்டு அன்றிரவு நான் எனது வீட்டில் படுத்திருந்தேன். மறுநாட்காலை நான் முத்தையன் கட்டிற்குப் போவதற்கான ஒழுங்குகளைச் செய்துவிட்டே படுக்கைக்குச் சென்றேன். முத்தையன்கட்டிற்குப் போவதற்காக எழும்பினேன்.

அந் நேரம் வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. அவ் வெடிச் சத்தம் எந்தப் பக்கத்தில்கேட்டது என்பது எனக்கு ஞாபகமில்லை. நான் வெடிச்சத்தம் கேட்டதாகச் சொன்னது துப்பாக்கி வெடிச்சத்தத்தையே. முதல் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அவ்வெடிச்சத்தம்கேட்ட 5 நிமிடங்களின் பின் "சடபிட" என்று வெடிச்சத்தங்கள் கேட்டன, அந்த வெடிச்சத்தங்கள் எனது மகன் நாராயணசாமி அழகம்மா வீட்டுப் பக்கமாகக் கேட்டது.

"நான் நாராயணசாமி வீட்டுப்பக்கமாகப் போனேன். அப்போது யாரோ ஓடியதைக் கண்டேன். தேவராசா துவக்கோடு ஓடுவதைக் கண்டேன். அப்படித் துவக்கைக் கொண்டு ஓடிய தேவராசா இன்று இம்மன்றில் இல்லை. நான் கண்டபோது முன்னுக்குச் சில பேர் ஓடிவிட்டார்ர்கள்.

டோர்ச்லைட் அடித்துப் பார்த்தே தேவராசா துவக்குடன் ஓடியதைக்கண்டேன். முன்னே ஓடியவர்களை எனக்குத் தெரியாது.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு ஸி. மேதிலால்நேரு சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

சட்டத்தரணி:— நீர் சம்பவதினத்தன்று இரவு போய் டோச்சடித்து தேவராசாவைக் கண்டபோது உமக்கும் தேவராசாவுக்கும் இடையில் எவ்வளவு தூரம் இருந்திருக்கும்? —சுமார் 15 யார் வரை.

சட்: நீர் டோர்ச்லைட்டு வெளிச்சத்தில் தேவராசாவைக்கண்டீர்? — தேவராசா ஓடிக்கொண்டிருக்கும் போது நான் அடித்த டோர்ச்லைட் வெளிச்சம் தேவராசாவின் கன்னத்தில் பட்டது.

சட்: அங்கு டோர்ச்லைட் வெளிச்சத்தைத் தவிர வேறு வெளிச்சங்கள் இருக்கவில்லை? —ரேட் லைட்டும் எரிந்து கொண்டிந்தது.

சட்: அங்கு ரேட் லைட் இல்லை?—அங்கு ரேட் லைட் இல்லை என்று சொல்வதை மறுக்கிறேன்,

சட்: நீர் எப்போ பொலிசுக்கு வாக்குமூலம் கொடுத்தீர்? — சம்பவ இடத்திற்கு கோட்டார் வந்தபின் காலை 10 மணிபோல் நான் பொலிசாருக்கு எனது வாக்கு மூலத்தை கொடுத்தேன்,

சட்: நாராயணசாமியின் மனைவி கொலையுண்ட அழகம்மா உமக்கு என்னமுறை? —மகள்.

சட்: தங்கலிங்கம் கொலை வழக்கில் உமது மருமகன் நாராயணசாமியும் பேரப்பிள்ளைகளான அழகேஸ்வரன், கருணேஸ்வரன் ஆகியோர் எதிரிகள்? —ஆம்,

சட்: அக்கொலை வழக்கில் தேவராசா வழக்காளி பக்கம் சாட்சியாகச்சாட்சிய மளித்தது உமக்குத் தெரியும்?— எனக்குத் தெரியாது.

சட்: நீர் பொலிசாருக்குக் கொடுத்த வாக்கு மூலத்தை இன்று மன்றிலும் அப்படியே கூறினீர்?—ஆம். (அ)

# சில்வர் ஸ்ரார் வெற்றி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கிழ் நடந்துவரும் உதைபந்தாட்டப் போட்டியில் அராலி சில்வர் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும் வட்டுக்கோட்டை வை எம் எச் எ விளையாட்டுக்கழகத்துக்கும் இடையில் நேற்றுமுன் தினம்நடைபெற்றபோட்டியில் இரண்டு கழகங்களும் 1 மணி நேட ஆட்டங்களில் ஒவ்வோரு கோல்களைப் போட்டு இறுதி வரை சமமாக விளையாடின.

பின்னர் 10 நிமிடநேர விளையாட்டின் போதும் இரண்டு கழகங்களும் அதேநிலையில் இருந்தன.

இறுதியாக இரண்டு கழகங்களுக்கும் 5 பனுல்டி கொடுத்த போது இரண்ம் முறையே: மூன்று கோல்களைப் போட்டு சமப்படுத்திக் கொண்டன. இறுதியில் 1 பனுல்டியை கொடுத்தபோது சில்வர் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் அதைப்போட்டு வெற்றியீட்டிக் கொண்டது.

## அணு

(5ம் பக்கத் தொடர்ச்சி)

புத்தளம் மாவட்டத்தை அண்டிய தப்போவ — கலா ஓயாப்பிரதேசத்திலும் 'யுரேனியம்' காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)


யாழ். நகரமண்டபம்

## மீண்டும் உபயோகத்துக்குத் திறந்து வைக்கப்படுதல்

1972ம் ஆண்டு முதல் பொதுமக்களின் உபயோகத்திற்கு விடப்படாதிருந்த யாழ். நகரமண்டபம் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டு

10-02-82ம் திகதி புதன்கிழமை

மாலை 5-15 மணிக்கு

மாண்புமிகு மாநகர முதல்வர்

திரு. இராஜா விசுவநாதன் அவர்களால்

மீண்டும் பொதுமக்கள் உபயோகத்திற்காக வைபவ ரீதியாக

திறந்து வைக்கப்படும்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

நிகழ்ச்சி நிரல்

01. மங்கள இசை.
02. மன்ற கீதம் — ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியால் அறிமுகம் செய்யப்படும்.
03. மெல்லிசை — ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி குழுவினர்.
04. மன்ற கீதத்தை ஆக்கிய கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களைக் கௌரவித்தல்.
05. தலைமையுரை — மாண்புமிகு மாநகர முதல்வர்.
06. நன்றியுரை.
07. நடன நிகழ்ச்சி திருமதி . லீலாஆறுமுகையாவின் சதங்கை நர்த்தனாலய மாணவிகள்.
08. நாடக அரங்கக் கல்லூரியினர் அளிக்கும் (ஜனாதிபதி விருதுகள் பெற்றது) 'பொறுத்தது போதும்' நாடகம் மேடையேற்றப்படும்.

சி. வி. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
நகரமண்டபம்,
யாழ்ப்பாணம், 08.02.1982. 2226


இன்று 100 வது நாள்

# "பரந்தன் போராட்டம் வெற்றிபெற மக்களும் எம்.பி.க்களும் உதவவேண்டும்"

## கூட்டுக்கமிட்டி உறுப்பினர் [illegible]கோள்

(யாழ்ப்பாணம்)

'பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை ஊழியரின் போராட்டம் இன்று 100 வது நாளாக நடைபெறுகிறது. போராட்டம் வெற்றிபெற சகல உதவிகளையும் செய்யுமாறு இந்நாட்டு மக்களையும் குறிப்பாக வடபகுதி மக்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.'

பரந்தன் ரசயானத் தொழிலாளர் கூட்டுக் கமிட்டி உறுப்பினர் திரு. இ. முருகதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

தொழிற்சாலையில் 81 அக்டோபர் 30 ல் சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் வெளியில் நின்று போராட்டத்தை ஆரம்பித்தனர். மீண்டும் 81 நவம்பர் 4 ம் திகதி பத்துத் தொழிற்சங்கத் தலைவர்கள் இடைநிறுத்தம்செய்யப்பட்டு, தொழிலாளர் 24 மணி நேரம் கடமைபுரிய வேண்டியேற்பட்டதால், வேலைக்குச் செல்ல மறுக்கும் நிலை ஏற்பட்டது. பின் ஏழு தொழிற்சங்கத் தலைவர்கள் மீது புகார்செய்யப்பட்டு, அவர்கள் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

வானொலி மூலமும் பத்திரிகைகள் மூலமும், மீண்டும் தொழிலாளர்களை வேலைக்கு வருமாறு விடப்பட்ட காலக் கெடுவுக்கு இணங்கத் தொழிலாளர் 81 நவம்பர்24ல் வேலைக் குத் திரும்பினர்.

தொழிற்சங்கத் தலைவர்கள் மீது எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்கவேண்டும், தொழிற்சங்கச் காரியாலயங்களை மீண்டும் இயங்கச்செய்ய வேண்டும், சகல நிரந்தரமற்ற தொழிலாளருக்கும் மீண்டும் வேலை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளைத் தொழிலாளர்கள் முன்வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து மற்றும் சில தொழிலாளர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டதுடன் வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதால், 81 நவம்பர் 27 ம் திகதிமுதல் உடலுழைப்பு, எழுதுவினைஞர், தொழில் நுட்ப மேற்பார்வையாளர் ஆகிய சகல நிரந்தரத் தொழிலிலுமுள்ள 368ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

தொழில் ஆணையாளரின் முயற்சியால் 81 டிசம்பர் 8ல் கொழும்பில் தொழிற்சங்கத்துடன், 81 டிசம்பர் 9ல் நிர்வாகத்துடனும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எவ்வித பயனும் கிடைக்காத படியால் போராட்டம் தொடர்ந்து 100 நாட்களாக நடைபெறுகிறது.

எங்கள் போராட்டத்திற்குச் சகல பகுதி மக்களும் ஆதரவு வழங்கியுள்ளனர். கிளிநொச்சிப் பகுதி விவசாயிகள் உதவி புரிந்துவருகின்றனர். காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை பொது ஊழியர் சங்கம் 5000 ரூபா நிதியுதவியளித்துள்ளது. முன்னுள் ஊழியர்கள் வெளிநாடுகளிலிருந்து நிதி திரட்டி அனுப்பியுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் சகல தொழிலாளரும் தமது உரிமைகளை வென்றெடுத்து நிர்வாகத்தினுல் எல்வித பழிவாங்கல் நடவடிக்கைகளும் மேற்கொள்ள மாட்டாது என்று உறுதிப்பாட்டுடன் வேலைநிறுத்தத்தை முடவுக்கு கொண்டுவருவது என திடசங்கற்பம் பூண்டுள்ளார்கள்.

# வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த கிரிக்கட்

[அரியாலை]

யாழ். பல்கலைக்கழகத்திற்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில், யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

யாழ். பல்கலைக்கழகக் கோஷ்டி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லாவிக்கட்டுகளையும் இழந்து 142 ஓட்டங்களைப்பெற்றது. இக் கோஷ்டியில் விளையாடிய செல்வன்கள் ரவிராஜ், சூரியகுமார், சுதர்சன் ஆகியோர் முறையே 25, 19, 16 ஓட்டங்களைப் பெற்றனர். செல்வன் ஜே. ஜே. ஜீவானந்தம் வெளியேருமலே 17 ஓட்டங்களை பெற்ருர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய செல்வன் ஞானசுப்பிரமணியம் 36 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுகளையும் செல்வன் சிவதாஸ் 45 ஓட்டங்களைக்கொடுத்து 2விக்கட்டுகளையும் பெற்ருர்.

அதனைத்தொடர்ந்து விளையாடிய யாழ்ப்பாணக்கல்லூரிக் கோஷ்டி எல்லாவிக்கட்டுகளையும் இழந்து 126 ஓட்டங்களை பெற்றது. இக் கோஷ்டியில் விளையாடிய செல்வன்கள் கணேசன், ரகுராஜ் ரவீந்திரன் ஆகியோர் முறையே 27, 19, 14 ஓட்டங்களைப் பெற்றனர்: இவர்களை எதிர்த்து பந்து வீசிய செல்வன் சுதர்சன் 40 ஓட்டங்களைக்கொடுத்து 4 விக்கட்டுகளையும், செல்வன் சூரியகுமார் 28 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் செல்வன் கிரிதரகுகன் 8 ஓட்டங்களைக்கொடுத்து 2 விக்கட்டுகளையும் பெற்றனர்.

யாழ்பல்கலைக்கழகக்கோஷ்டி தனது இரண்டாவது ஆட்டத்தில் 4விக்கட்டுகளையும் இழந்து 81 ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இக்கோஷ்டியை சேர்ந்த செல்வன்கள் சுதர்சன், சூரியகுமார் ஆகியோர் முறையே 33, 25 ஓட்டங்களைப்பெற்றனர்.

இவர்களை எதிர்த்துப்பந்து வீசிய செல்வன் வேங்கடேஸ்வரன் 44 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணக்கல்லூரிதனது இரண்டாவது ஆட்டத்தில் 6விக்கட்டுகளை இழந்து 27 ஓட்டங்களை பெற்று [illegible] முடிவடைந்ததால் ஆட்டத்தை முடித்துக் கொண்டனது. இவர்களை எதிர்த்து பந்துவீசிய செல்வன் ரவி[illegible]ஜ் 10 ஓட்டங்களைக்[illegible] 3 விக்கட்டுகளையும், செல்வன் கிரிதரகுகன் 7 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கட்டுகளையும் பெற்றனர். (அ)

## தனிமாவட்ட...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

யாரும் பாராமுகமாய் இருந்துவிடமுடியாது. அரசியல்வாதியின் கோரிக்கை என்றுதட்டிக்கழித்திடவும் முடியாது. 91562 மக்களின் [illegible] கோரிக்கையாக, அவர்களுக்கு விமோசனம் [illegible] வெள்ளியா[illegible] சாதி, சமய, அரசி[illegible] பேதம், [illegible] வேறு[illegible] கிளிநொச்சி மக்கள் அனைவரு[illegible]

[illegible]

## புன்னைக்குடா வீடமைப்புத்திட்டம்

# அபிவிருத்தி சபைமூலம் வீடுகள் வழங்கப்படும்?

(மட்டுநகர்)

மட்டக்களப்பு புன்னைக்குடா வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகளை மீனவர்களுக்கு மாவட்ட அபிவிருத்திச்சபை மூலம் வழங்க வேண்டுமென்ற பிரேரணை சபையின் கூட்டணி உறுப்பினர்களால் கொண்டு வரப்படலாம் எனத் தெரிய வருகிறது.

வீடமைப்புத்திட்டத்தில் 100 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன இந்த வீடுகளைவெளி மாவட்ட மீனவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மீனவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். ஆனாலும் மாவட்ட அபிவிருத்தி சபையில் இதுபற்றி பட்டிருப்பு எம். பி. திரு பூ. கணேசலிங்கம் ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த வீடுகளை உள்ளூர் மீனவர்களுக்கு வழங்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த நிலையில், இவ்விவகாரத்தை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு கே. டபிள்யூ தேவநா, ஜனதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்ததோடு கூட்டணி ஜனதிபதி சந்திப்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட ஜனதிபதி இந்த வீடுகள் வெளி மாவட்டத்தாருக்கு வழங்கப்படாமல்; பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை, மட்டகளப்பு 2வது எம். பி. ஜனப் பரீத் மீராலெப்பை ஆகியோர் மாவட்ட மீனவரைத் தெரிவு செய்வார்கள் என்று தெரிவித்தார்.

ஆனாலும் இந்த ஏற்பாடு குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியின் ஆதரவாளர்களுக்கு மட்டுமே வீடுகள் கிடைக்க வழிவகுக்கலாம் என்றும் ஒரு சாரார் புறக்கணிக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்த வீடுகளை அபிவிருத்தி சபைமூலம் வழங்கும் திட்டம் நல்ல முடிவாக இருக்கும். என்று இப்பகுதிப் பிரமுகர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர்.

இப் பிரேரணை கொண்டு வரப்படும் பட்சத்தில் ஐ. தே. க. உறுப்பினர் ஒருவர் சமூகமளிக்கத் தவறினலும் கூட தலைவரின் மேலதிக வாக்கினல் நிறைவுசெய்யப்படும் வாய்ப்பும் கூட்டணிக்கு உண்டுஎன்று தெரிவிக்கப்பட்டது. (உ)

---

## இந்தோனேஷியாவில் உளவு பார்த்தாராம்

# சோவியத் ராஜதந்திரி வெளியேற்றப்பட்டார்

### விமான நிலையத்தில் கைகலப்பு

ஜகார்த்தா, பெப். 9

இந்தோனேஷியாவில் உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் சோவியத் ராஜதந்திரி ஒருவர் இந்தோனேஷிய அரசாங்கத்தால் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார்.

இந்த ராஜதந்திரி நேற்று ஜகார்த்தா விமானநிலையத்திலிருந்து விமானமூலம்சோவியத்யூனியனுக்கு அனுப்பிவைக்கப்பட்டபோது விமானநிலையத்தில் சோவியத்தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் இந்தோனேஷிய பாதுகாப்பு அதிகாரிகளுக்குமிடையே கைகலப்பு மூண்டது. இதனல் நேற்று தலைநகரம் எங்கும் பெரும் பரபரப்பு நிலவியது.

இதனையடுத்து இந்தோனேஷியஅரசாங்கம் அங்குள்ள சோவியத் ராஜதந்திரிகளின் எண்ணிக்கையைப் பெருமளவில் குறைக்க உத்தேசித்திருப்பதாக அறிவித்துள்ளது. (இ)

---

### கச்சதீவு...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா தலைமையில நேற்றுக்காலை மகாநாடொன்று நடைபெற்றது.

இம்மாநாட்டில் மன்னர் அரசாங்க அதிபர் திரு. டி. வாமதேவன், யாழ். மறைமாவட்ட முதல்வர் அதி. வண பிதா மைக்கேல்சுவாமி அடிகள், கச்சதீவு பங்குக்குரு வண பீட்டர் துரைசிங்கம், கடற்படை கமாண்டர் திரு. நிகால் பெர்னண்டோ, வடபிராந்திய சுங்க திணைக்கள கட்டுப்பாட்டாளர் திரு எஸ். என். ஜே. சேனரத்ன, யாழ். பொலிஸ் அதிபர் திரு. ஆர். என் எச். விஜயசேகர, யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஜி. ஏ. எட்வேட், இராணுவ பொறுப்பதிகாரி எச். டி. பெர்னண்டோ, ஆலய மூப்பர் திரு. நா. அந்தோனிப்பிள்ளை: வடபிராந்திய விற்பனைத் திணைக்களஉதவிஆணையாளர், திரு. எஸ். கணேசநாதன், யாழ். செயலக தலைமைக்காரியாலய பொறுப்பதிகாரியும் உதவி அரசாங்க அதிபருமான திரு. எம். சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இம்மகாநாட்டில், குடிநீர், உணவு, பாதுகாப்பு, சுகாதாரவசதிகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. (மா)

---

## திருமணமான பெண்மீது

# பலாத்காரம் புரிந்துவிட்டு நகைகளும் கொள்ளை?

### சந்தேக நபர் கைது; நகைகளும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தனிமையிலிருந்த திருமணமான பெண் ஒருவரின் மீது பலாத்காரம் பிரயோகித்த ஒருவர் அப்பெண் அணிந்திருந்த 14ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியையும் அட்டியலையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளாராம்.

பருத்தித்துறை பொலிஸ் பகுதியிலுள்ள புலோலியிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

குறிப்பிட்ட பெண் தமது வீட்டில் தனிமையில் இருந்த போது அங்குவந்த ரி தேவராசன் என்பவர் அப்பெண்ணைப் பயமுறுத்தி பலாத்காரம் புரிந்ததுடன் நகைகளையும் கொள்ளையடித்துக் கொண்டு சென்றுவிட்டாராம்.

இவர் முன்பு இப்பெண்ணின் வீட்டில் வேலைசெய்து வந்தவரென்றும் பின்பு விலகி சிமெந்துக்கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்துகொண்டிருந்தாரென்றும்விசாரணையில் தெரியவந்துள்ளது.

பருத்தித்துறை பொலிசார் சந்தேகநபரைக் கைதுசெய்ததுடன் கொள்ளையடித்த நகைகளையும் கைப்பற்றியுள்ளனர். (மா)

---

### பேராசிரியர் இராதாகிருஷ்ணன் யாழ். வருகிறர்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகத்தார் நடத்தும் பாரதி—கம்பன் விழாவில், திருச்சி தேசியக்கல்லூரி பேராசிரியர் இரா இராதாகிருஷ்ணன் இம்முறையும் கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

யாழ்.நல்லை ஆதீனத்தில் மார்ச் 24ம் திகதி தொடக்கம் 28ம் திகதி வரை இவ்விழா நடைபெறவிருக்கிறது.

அ. இ. கம்பன் கழகத்தார் மார்ச் 19 தொடக்கம் 21வரை நடாத்தும் கம்பன் விழாவிலும் பேராசிரியர் இராதாகிருஷ்ணன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

பேராசிரியரின் யாழ்,நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கம்பன் கழக செயலாளர் திரு. க. குமாரதாசன் மேற்கொண்டு வருகிறர். (மா—இ)

---


# ஹோம் பிஞன்ஸ்

லிமிட்.

திறமைமிக்க டெலிவிஷன்

SANYO — T. V. BLACK AND WHITE

திரை 14", 20"

திடகாத்திரமான

சைக்கிள்கள் (HELMET-தொப்பிகள்)

'HOME MATE' வீட்டுப் பாவனைக்குகந்த

மணிக்கு 1000 கலன் நீர் இறைக்கும்

மின் பம்புகள்

சுட்டுப்பணமுறையிலும் பெறலாம்

# ஹோம் பிஞன்ஸ்

லிமிட்.

இல. 82, கன்னதிட்டி - யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 8310


---

# இன்று பாரதி நூற்றுண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆசிரிய மாணவர் முத்தமிழ் மன்றத்தினரால் இன்றுமாலை கல்லூரி மண்டபத்தில் பாரதி நூற்றுண்டு விழா கொண்டாடப்படுகிறது.

விரிவுரையாளர் திரு. வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) தலைமையில் நடைபெறும் இவ்விழாவில்கல்லூரி முதல்வர்திருமதி இ. ஆனந்தகுமாரசுவாமி பாரதியின் உருவப் படத்தை திரைநீக்கம் செய்து விழாவை ஆரம்பித்து வைப்பார்.

விரிவுரையாளர் திரு. வை. சிவப்பிரகாசம் சிறப்பு சொற்பொழிவு நிகழ்தவுள்ளார். மற்றும் மாணவ ஆசிரியர்களின் சொற்பொழிவில் திரு. கோ. சந்திரசேகரம் '20ம் நூற்றுண்டு கவிதை இலக்கிய முன்னேடி பாரதி' திருமதி த. அருளானந்தம் 'தமிழ் இலக்கியவளர்ச்சியில் பாரதியின் பங்கு' திரு அ. அரியகுமார் ''பாரதியின் சமுதாய சீர்திருத்த சிந்தனை'' என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றுவார்கள்.

சிறப்புநிகழ்ச்சியாக பாஞ்சாலிசபதத்தில் பாரதிகண்ட பாத்திரங்கள்'' என்றபொருள் பற்றிய கருத்தரங்கும் இசை நிகழ்ச்சியும் நடைபெறும். (இ)

---

### ஒரு லட்சம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் விசாரணை மேற்கொண்டுவரும் பொலிசார் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை விரைவில் மீட்டுவிடுவார்கள் என்று நம்புகிறர்கள்.

பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட இக் கொள்ளையர்களுக்கும், தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்கும் எதுவித தொடர்புமில்லையென்றும் தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அதேநேரத்தில் இக்கொள்ளையர்கள் தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் பெயரைச்சொல்லியே இக்கொள்ளைகளை அடித்து வந்ததாக இப்பொழுதுதெரியவந்துள்ளதாம் பொதுமக்களும் இக்கொள்ளையர்களைப் பிடிப்பதில் பொலிசாருக்கு உதவி வருவதாகவும் சொல்லப்படுகிறது.

இதேவேளையில காங்கேசன்துறைப் பொலிசாரும் யாழ். நகரில உள்ள சில நகைக் கடைகளில் சுமார் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான கொள்ளை நகைகளை உருக்கிய நிலையில் மீட்டுள்ளனராம். (மா-இ)

---

### நீதிமன்றத்துக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்துவந்த உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஸ்டீபன், யாழ். உதவிப்பொலிஸ் அதிபர் திரு. எஸ் எஸ். நவரத்தினராஜா ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (இ)

---

### மரணதண்டனை நீக்கம்: நான் ஆதரிக்கவில்லை

— இந்திய உப ஜனதிபதி

புதுடில்லி, பெப். 8

''இந்தியாவில் மரண தண்டனை நீக்கப்படுவதை நான் ஆதரிக்கவில்லை. நாட்டில் குற்றச் செயல்கள் தினமும் அதிகரித்து வருவதால் மரண தண்டனை தொடர்ந்தும் அமுலில் இருக்கவேண்டும்.''

மேற்கண்டவாறு இந்திய உப ஜனதிபதி ஜனப் ஹிதயத்துல்லா புதுடில்லியில் நடைபெற்ற குற்றச்சட்டம் பற்றிய கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் கூறினர்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி துரைசிங்கம்

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய ஆசிரியை திருமதி புவனேஸ்வரி துரைசிங்கம் காலமானர், இவர் புங்குடுதீவு பெருங்காடு அமெரிக்கன் மிஷன் வித்தியாலய அதிபர் துரைசிங்கத்தின் அருமை மனைவியும், வேம்படி மகளிர் கல்லூரி மாணவி யசோதாவின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஆறுமுகம் — அமிர்தம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், பேரின்பநாதன், திருமதிகள் கமலாம்பிகை கணேசன், யோகாம்பிகை இராமலிங்கம், பாக்கியலட்சுமி சித்திரவேல், இராஜராஜேஸ்வரி ஆகியோரின் தமக்கையாரும், நாவேந்தன், பராசக்தி, ஞானசக்தி, சிவானந்தன், இளங்கோவன், சரோஜினிதேவி, தமிழ்மாறன், திருமதி நவமணி பேரின்பநாதன் ஆகியோரது மைத்துனியும் ஆவார்.

அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று (10—02—82) புதன்கிழமை காலை 10 மணிக்கு புங்குடுதீவு மணற்காடு மயானத்தில் நடைபெறும். 2237

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News[paper at] the General P.O..Sri Lanka Regd. Q.B:160236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.